பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 21 செவ்வாய்க்கிழமை (04-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:70

ஜனாதிபதியின் சுதந்திரதினச் செய்தி

## சகல சமூகங்களதும் அபிலாஷைகள் அங்கீகரிக்கப்பட்டாக வேண்டும்!

### அதுவே பிரச்சினைக்கு முடிவுகட்டும்



கொழும்பு,பெப்.4

யுத்தத்தைப் புறக்கணித்துவிட்டு சகல சமூகங்களின் உரிமைகளும் அபிலாஷைகளும் அங்கீகரிப்பட்டு தற்போதைய பிரச்சினைக்கு முடிவு கட்டவேண்டும். இதற்கு மக்கள் தயாராக வேண்டும்.

- இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சுதந்திரதினத்தை ஒட்டி அவர் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2ஆயிரத்து 500 வருடப் பாரம்பரியங்களைக் கொண்ட நாடு இது. அப்படியிருந்தபோதும் ஒரே தேசமாகப் பரிணமிக்கத் தவறிவிட்டது. இதுவே பிரச்சினை தீர்க்கப்படாமைக்கும் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப் பட்டமைக்கும் காரணமாகும்.

கடந்த இரு தசாப்தங்களில் நாம் கண்ட ஆயுதப்போராட்டமானது எமது தலைமுறை கண்ட மோசமான அழிவைத் தந்தது. தற்போதைய சமாதான முயற்சி ஆயுதப்போராட்டம் ஆரம்பமான பின் நடக்கும் 6ஆவது முயற்சியாகும். இதில் நாம் வெற்றியடையவேண்டுமானால், பயங்கரவாதத்துக்கான அடிப்படைக் காரணங்கள் தீர்க்கப்பட்டு, தீர்வு காணவேண்டியது அவசியமாகும். இந்த தீர்வு அனைத்து மக்களின் அங்கீகாரத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் கையில் பானையும் அகப்பையும்

### உரிய நேரத்தில் செயற்படுவார் என்கிறார் அனுரா

கொழும்பு,பெப்.4

சோற்றுப் பானையும் அகப்பையும் ஜனாதிபதியின் கைகளிலேயே இருக்கின்றன. சரியான நேரத்தில் அவர் செயலில் ஈடுபடுவார் என்று கம்பஹா மாவட்ட சு.க. பிரதம அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்கா எம்.பி. கூறினார்.

ஹொரகொல்லை பொ.ஐ. முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றுகை

(14ஆம் பக்கம் பார்க்க)

## புதிய யுகத்தை உருவாக்குவோம் சுதந்திரதினச் செய்தியில் பிரதமர்

கொழும்பு,பெப்.4

யுத்தத்தினதும் பயங்கரவாதத்தினதும் தீய விளைவுகளை முடிவுக்குக் கொண்டுவந்து, சமாதானத்தின் நுழைவாயிலை திறந்து ஒரே நாட்டிற்குள் ஒரே இனத்தவர்களாக சுதந்திரமாக வாழ்வதற்கான அமைதிச் சூழ்நிலை தோன்றியிருக்கிறது. இச்சூழ்நிலையில் சுதந்திரத்தை பூரணமாக அனுபவிப்பதாயின் இன, மத மற்றும் புற வேறுபாடுகளுக்கு அப்பாற்

(14ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய பாதுகாப்பு விடயத்தில் முடிவுகளை என்னை ஆலோசிக்காமல் எடுக்காதீர்கள்

## கடிதமூலம் ஜனாதிபதி பிரதமருக்கு அறிவிப்பு

கொழும்பு,பெப்ரவரி4

**தேசியப் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில தன்னோடு கலந்தாலோசனை செய்யாமல் எந்த முடிவும் மேற்கொள்ளக் கூடாது என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம்மூலம் தெரிவித்திருக்கின்றார்.**

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புலிகளுக்கு வானொலி உபகரணங்களை நோர்வேத் தூதரகம ஊடாக வழங்கியது சட்டத்திற்கு முரணான செயலாகும்.

இவ்விடயம் தொடர்பாக என்னோடு கலந்தாலோசனை செய்வதற்கு வாய்ப்புக்கள் இருந்தன. ஆகக்குறைந்தது

(14ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. மாவட்டத்திலும் சுதந்திர தினம் பகிஷ்கரிப்பு

சுதந்திர தினத்தை பகிஷ்கரித்து மட்டக்களப்பில் கறுப்புக் கொடி யேற்றி எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு மட்டக்களப்பு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தமிழ்மக்களுக்கு நிரந்தரத்தீர்வு கிடைக்கும்வரை சுதந்திரதினம் என்பது அந்நியப்பட்ட விடயம் என

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் இன்று சுதந்திரதின கொண்டாட்டம்

### வடக்கு - கிழக்கு மாணவர் பங்கேற்கவில்லை

கொழும்பு,பெப்.4

இலங்கையின் 55 ஆவது சுதந்திரதினம் இன்று காலை கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கொண்டாட்டங்களுக்கு தலைமை வகிப்பர்.

முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையும் மாணவர்களின் அணிவகுப்பும் கலாசார நிகழ்ச்சிகளும் கொண்டாட்டங்களில் முக்கிய இடம் பெறும்.

வடக்கு, கிழக்கிலிருந்தும் முதன்முறையாக தமிழ் மாணவர்கள் சுதந்திரதின விழாவில் பங்கு பெறுவர் என முன்னர் அறிவிக்கப்பட்டபோதிலும் அப்பிரதேச மாணவர்கள் விழாவில் பங்குபெறவில்லை.

காலை எட்டு மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா சுதந்திர மண்டபத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைக்க வைபவங்கள் ஆரம்பமாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இன்று துக்கதினம் அனுஷ்டியுங்கள்!

### பொது அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.4

இன்றைய சுதந்திரதினத்தை துக்கதினமாகக் குடாநாட்டில் அனுஷ்டிக்குமாறு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடும்படியும் -

கறுப்புப் பட்டிகளை அணிந்து பணிகளில் ஈடுபடும்படியும் பொது அமைப்புகள் கோரியுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கீழ்நிலை பெண் அதிகாரிக்கு சல்யூட் அடித்த உயர்அதிகாரிகள்

### சுதந்திர தின ஒத்திகையில் சர்ச்சை

கொழும்பு,பெப்.4

சுதந்திர தினக் கொண்டாட்டங்களையொட்டி நேற்று நடந்த அணிவகுப்பு ஒத்திகையில் கீழ்நிலை பெண் அதிகாரி ஒருவருக்கு உயர் நிலை அதிகாரிகள் 'சல்யூட்' அடித்து மரியாதை செலுத்தியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அணிவகுப்பு மரியாதையை ஏற்பதற்காக ஜனாதிபதி நிற்கும் மேடையில் ஒத்திகைகளின்போது ஜனாதிபதியின் மூத்த சகா ஒருவரே நிற்பது வழமை. ஆனால், நேற்று அத்தகைய

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ ல.சு.க. - ஜே.வி.பி. நாளைமறுதினம் பேச்சு

கொழும்பு,பெப்.4

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான மற்றொரு சுற்று முக்கிய பேச்சு நாளை மறுதினம் வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ.ல.சு.க. சார்பில் ஜனாதிபதி மற்றும் பிரதம அமைப்பாளர் மங்கள சமரவீர ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். ஜே.வி.பியின் சார்பில் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திஸா நாயக்கா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படுவது தொடர்பான நிபந்தனைகள், அது பற்றிய ஆலோசனைகள், விட்டுக்கொடுப்புகள் என்பவை பற்றி இச்சந்திப்பில் ஆராயப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

## வவுனியாவில் கறுப்புப்பட்டி அணிந்து மூவாயிரம் மாணவர்கள் மௌனப் பேரணி!

### பாடசாலைகள், வீடுகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரிக்கை

வவுனியாவில் நேற்று முற்பகல் 3,000இற்கு மேற்பட்ட மாணவர்கள் மௌனப் பேரணியொன்றை நடத்தினர். மத்திய மகாவித்தியாலய முன்றலிலிருந்து ஆரம்பமான பேரணி அரச செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு மேலதிக அரச அதிபர் எஸ். ரகுநாத பிள்ளையிடம் பிரதமருக்கான மகஜர் கையளிக்கப்பட்டது. தமிழ் மக்களுக்குச் சுதந்திரமில்லை. இராணுவம் தொடர்ந்தும் பாடசாலைகளில் நிலை கொண்டிருப்பதால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டவே இப்பேரணி நடத்தப்பட்டது.

மாணவர்கள் அனைவரும் கறுப்புப்பட்டிகள் அணிந்திருந்தனர்; பதாகைகளையும் தாங்கியிருந்தனர். "பாடசாலைகள் - இராணுவ முகாம்கள், வடுகள் - ஆயுதக்களஞ்சியங்கள். இது தானா எமது சுதந்திரம்? சுதந்திரம் கிடைத்தது யாருக்கு? தமிழர்களுக்கு அது இல்லையே" என்பது போன்ற சுலோகங்கள் பதாகைகளில் காணப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடற்பரப்பில் 16 இந்திய மீனவர் கைது!

மன்னார் எருக்கலம்பிட்டி கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 16 இந்திய மீனவர்கள் மன்னார் மீனவர்களால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6 மணியளவில் நான்கு படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் மன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருக்கும்போது - மன்னார் மீனவர்களால் சுற்றிவளைக்கப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் அரச அதிபர், விடுதலைப் புலிகளின்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## உலக வங்கியின் உதவித்திட்டம் பாழடிக்கப்படுகிறது

# பாடசாலை கற்பித்தல் உபகரணங்கள் கொள்வனவில் அதிபர்கள் ஊழல், மோசடி!

### கல்முனை கல்வி வலயத்தில் அதிகாரிகள் கண்டுபிடிப்பு

சாய்ந்தமருது,பெப்.4

உலக வங்கியின் ஆலோசனைப்படி அந்த வங்கியின் நிதியுதவியுடன் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் குணநல உள்ளீடு (Quality Inputs) கற்பித்தலுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் கல்முனைக் கல்வி வலயத்தில் பல அதிபர்கள் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். கல்வி அதிகாரிகள் இதைக் கண்டுபிடித்துள்ளனர்.

மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் மாணவர்களுக்கு இலவச மதிய உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. பல பாடசாலைகளில் அதிபர்கள் இலவச மதிய உணவுக்கான பணத்தை பெருமளவில் சூறையாடியதால் இலவச மதிய உணவுத் திட்டத்தை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அப்படியான ஒரு நிலை இந்தப் பாடசாலை உபகரணக் கொள்வனவுக்கும் ஏற்பட்டுவிடுமோ என்று வெகுவாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது. குணநல உள்ளீடு கற்பித்தல் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பாடசாலைக்கும் வருடாந்தம் ஆகக்குறைந்தது 50 ஆயிரம் ரூபா முதல் 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை பணம் ஒதுக்கப்படுகின்றது. இந்தப் பணம் நேரடியாக அந்தந்தப் பாடசாலைகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றது.

இந்தப் பணத்தைக் கொண்டு பாடசாலைக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்யலாம். அதற்கான அனுமதி வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் இருந்து பெறப்படுகின்றது.

இவ்வாறு அனுமதி பெறப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களில் பெரும்பாலானவை பாடசாலைகளில் இல்லை. தரக்குறைவான பொருள்கள் அவற்றின் பெறுமதிக்கு மேல் கூடுதலான விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் கல்வி அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கல்முனைக் கல்வி மாவட்ட பாடசாலை ஒன்றில் 55ரூபா பெறுமதியுடைய துவாரமிடும் கருவி ஒன்று (Puncher) 125 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது.

முதலுதவிப்பெட்டி ஒன்று ஆயிரத்து 200 ரூபாவுக்கு வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால், முதலுதவிப் பெட்டி பாடசாலையில் இல்லை. ஒன்று அல்லது இரண்டு தேசியக் கொடிகள் வாங்கவேண்டிய பாடசாலைகளில் பத்து தேசியக் கொடிகள் ஒவ்வொன்றும் 400 ரூபா வீதம் வாங்கப்பட்டுள்ளன. ஆனால், தேசியக் கொடிகளில் ஒன்றுகூட பாடசாலையில் இல்லை.

மின்சார விநியோகம் இல்லாத பாடசாலை ஒன்றில் 16ஆயிரத்து 500 ரூபா விலை கொடுத்து தலைககு மேலால் ஒளி குவிந்து வீசச் செய்யும் இயந்திரம் (Over head Projector) ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆச்சரியமும் நடந்திருக்கிறது.

கொள்வனவு செய்த பொருள்களுக்கெல்லாம் அதிபர்கள் ரசீது வைத்திருக்கிறார்கள்.

பொருள்களின் உண்மையான விலை தெரியாமல் அவர்கள் கூடுதலாகப் பணம் செலுத்துவதில்லை. கூடுதலாகச் செலுத்தப்பட்ட பணம் அவர்களுக்கு கமிஷனாகக் கிடைத்துவிடுகிறது.

இந்தக் கமிஷனுக்காகவே உண்மையில் தேவையில்லாத பொருள்களையும் வாங்குகிறார்கள்.

வாங்குகிற பொருள்கள் எல்லாம் பாடசாலைகளில் இருந்தாலாவது பரவாயில்லை. அவை மர்மமாக மறைந்துவிடுகின்றன.

இப்படியான 'திருவிளையாடல்'களால் அருமையாக இந்தக் குணநல உள்ளீட்டு கற்பித்தல் திட்டம் தொடர்ந்து இருக்குமா என்று கவலையாக இருக்கிறது என்று கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம)

### தவறான செய்தி

01.02.2003 திகதிய உதயனின் முதல் பக்கத்தில் 'அழுகிய நிலையில் பெண்ணின் சடலம் வல்வையில் மீட்பு' என்ற தலைப்பில் வெளியான செய்தி தவறானது என்று தெரியவந்துள்ளது. சடலம் ஏதும் மீட்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக மனம் வருந்துகிறோம். (ஆ-ர்)

## ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு,பெப்.4

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படவிருக்கிறது. ஜனாதிபதி வழங்கும் மன்னிப்பின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்படுவர் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க அறிவித்திருக்கிறார்.

கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான அனுமதியைக் கோரி உள்துறை அமைச்சு கடந்தவாரம் ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. (ம)

## பணிமனை இடம் மாற்றம்

இதுவரை காலமும் சுன்னாகம் - கந்தரோடை வீதியில் இயங்கி வந்த விடுதலைப் புலிகளின் அரசியற் பணிமனை இடம்மாற்றப்பட்டுள்ளது. உடுவில், தெல்லிப்பழை பிரதேசங்களுக்கான இந்த அரசியற் பணிமனை கடந்த முதலாம் திகதி முதல் சுன்னாகம் பிரதான வீதியில் இலங்கை வங்கிக் கட்டடத்திற்கு அருகில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

# உலர் உணவு நிவாரணம் வழங்க எம்.பியின் முயற்சியால் ரூ.23கோடி

புத்தளம்,பெப்.04

புத்தளம் தொகுதியிலுள்ள புத்தளம், கல்பிட்டி, வண்ணாத்திவில்லு, முந்தல் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் வதியும் இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவு நிவாரணங்களை வழங்கவென - புனர்வாழ்வு அகதிகள் மறுவாழ்வு அமைச்சு சுமார் 23 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு, அகதிகள் மறுவாழ்வு அமைச்சின் இணைப்பாளருமான ரிசாத் பதியுதீன் விடுத்த வேண்டுகோள்களை அடுத்தே அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா இப்பணத்தை புத்தளம் மாவட்ட செயலாளர் ரவி ஜயலத் திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைத்துள்ளார். இதுகுறித்து ரிசாத் பதியுதீன் எம்.பி.தகவல் தருகையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படவேண்டிய உலர் உணவுப் பொருள்களில் அரிசி மாத்திரம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. ஏனைய பொருள்கள் வழங்கப்படவில்லை - என்றார்.

எதிர்வரும் 12ஆம் திகதி புனித ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படுவதால் 10ஆம் திகதிக்கு முன்னர் உலர் உணவுப் பொருள்களை வழங்குமாறு ரிசாத் பதியுதீன் எம்.பி.மாவட்ட செயலாளரைப் பணித்துள்ளார். (ம)

## சிப்பாய்களைப் பிடித்த சம்பவம்:

# கைதான விழிப்புக் குழுவினருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது

கரவெட்டி,பெப்.4

வடமராட்சி கிழக்கு நடுக்குடத்தனையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட விழிப்புக்குழு உறுப்பினர் உட்பட எண்மரையும் பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிவான் அபிறேம்சங்கர் அனுமதித்தார்.

நடுக்குடத்தனைப் பகுதியில் பணியில் இருந்த விழிப்புக்குழுவினர் இரவு நேரம் நடமாடிய இரு சிப்பாய்களை பிடித்ததும் -

அதன்பின்னர் அந்தப்பகுதியில் தேடுதல் நடத்திய பொலீஸார் விழிப்புக்குழு உறுப்பினர் உட்பட 8 பேரை கைது செய்து தடுத்து வைத்திருந்தமையும் - தெரிந்தவையே.

பிரஸ்தாப எண்மரையும் பருத்தித்துறை பொலீஸார், நீதிவான் அ.பிறேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

எண்மரையும் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் மேல் விசாரணையை நாளை புதன்கிழமை வரை ஒத்திவைத்தார்.

கைதானவர்களின் சார்பில் சட்டத்தரணியும் யாழ். எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி ஆஜராகியிருந்தார். (ம-3-70)

# கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான வயதெல்லைக்கு மீள் பரிசீலனை

## கத்தோலிக்க மாணவர் கோரிக்கை

கொழும்புத்துறை,பெப்.4

கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான கத்தோலிக்கப் பாட மாணவர்களின் வயதெல்லையை மீள்பரிசீலனை செய்யுமாறு வன்னிப் பிரதேச கத்தோலிக்க மாணவர்கள் 'பாதுகாவலன்' பத்திரிகை ஊடாக கடிதம் ஒன்றினை கல்வியியற் கல்லூரிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னிப் பிரதேச கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் பின்வரும் விடயங்களைத் தங்கள் கவனத்திற்கும் பரிசீலனைக்கும் கொண்டு வரவிரும்புகிறது.

2001ஆம் ஆண்டில் இருந்து கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெறும் கத்தோலிக்க மாணவரின் வயதெல்லை முப்பதாக இருந்தது. ஏனைய மதங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆனால், கத்தோலிக்க மாணவர்கள் கொழும்பிலுள்ள கத்தோலிக்க மறைக் கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் பரீட்சையின் சான்றிதழையும் மேலதிகமாகச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இதற்கு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் பின்னர் மூன்று ஆண்டு காலம் தேவைப்படும்.

சென்ற ஆண்டில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி அனைவர்க்கும் வயதெல்லை 25 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, நாம் கல்வியியற் கல்லூரிக்கு அனுமதிபெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாம் கல்வியியற் கல்லூரிக்கு அனுமதிபெற்று எமது உயர்கல்வியைத் தொடரும் பொருட்டு இந்த முறையை மாற்றி முன்னர் இருந்தது போல் 30 வயதெல்லையை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகின்றோம் என்றுள்ளது. (ஒ-30)

## நாம் பௌத்த மதத்துக்கு எதிரானவர் அல்லர் ஆனால்

# அரச மரம் நிற்கும் இடத்திலெல்லாம் சிலையை வைத்து விகாரை கட்டாதீர்!

## பொது அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்து

வலி.வடக்கு,பெப்.4

நாம் பௌத்த மதத்துக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால், அரசமரம் நிற்கும் இடமெல்லாம் விகாரை கட்டி அந்தப் பகுதியை பௌத்தப் பிரதேசமாகக் காட்ட முனைவதையே நாம் கண்டிக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது வலி.தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியம்.

கந்தரோடையில் விகாரை ஒன்று அமைக்கப்பட்ட விடயம் தொடர்பாக ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இது குறிப்பிடப்பட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிகக்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எழுதப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட முக்கிய விடயமான மக்களின் இயல்பு வாழ்க்கை என்ற விடயம் எமது பிரதேசத்தில் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி அடிப்படை வசதிகள் அற்ற வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் அவர்களின் மனதில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தும் வகையில் கந்தரோடைப் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி நிலையக் காணியில் ஒரு புத்தவிகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இடம் உண்மையில் யாருக்கு? எந்த மதத்தினை சார்ந்தவர்களுக்கு சொந்தம் என ஆராய்ச்சியின் முடிவு எட்டப்பட முன்னர் இப்படியான விகாரை ஒன்றினைப் புதிதாக அமைத்திருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மட்டுமல்ல சிறிலங்காவின் நிர்வாகத்தை அவமதிக்கும் செயலாக அமைந்துள்ளது!

ஒரு பிரதேசத்தில் வழிபாட்டுத் தலமொன்றை அமைப்பதாக இருந்தால், அப்பகுதிப் பிரதேச செயலரிடமோ, அன்றி அரச அதிபரிடமோ அனுமதிபெறவேண்டும். இந்த விகாரை அமைக்கும் விடயத்தில் அது கூடக் கடைப்பிடிக்கப்படவில்லை. இதேபோன்ற பல விகாரைகள் யாழ்.குடாநாட்டின் பல கிராமங்களில் புதிது புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. அரசமரம் நிற்கும் இடமெல்லாம் புத்தரின் சிலை வைக்கப்பட்டு வழிபாட்டுத் தலமாக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் இருந்து வடபகுதி நோக்கி வரும் சிங்கள மக்கள் இவ் விகாரைக்குச் சென்றுவருவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இது ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும்.

நாங்கள் புத்த மதத்திற்கு விரோதிகள் அல்லர். யாழ்ப்பாணத்தில் புத்த விகாரையும், நயினாதீவில் நாக விகாரையும் அமைந்துள்ளன. அது தொடர்பாக நாம் எந்தவிதமான பிழையான கருத்துக்களையும் கூறவில்லை; கூறப்போவதுமில்லை. ஆனால், அரச மரம் நிற்கும் இடமெல்லாம் புத்தபகவான் இருந்த இடமென்று அங்கே அவரின் சிலையை வைத்து அதனைக் காலம் காலமாகவுள்ள வழிபாட்டுத்தலமாக காட்ட முனைவதுதான் எம்மை அவமதிக்கும் செயலாக அமைந்துள்ளது. இதுமட்டுமல்ல அதன் அருகில் இராணுவ முகாமை அமைத்திருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான நடவடிக்கையாக அமைந்துள்ளது. இந்த நடவடிக்கைகள் காரணமாக எமது மக்கள் மனதில் அரசின் மீது அவநம்பிக்கையையும், அச்சம் கலந்த பய உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ் விகாரையை இவ்விடத்தில் இருந்து அகற்றுவதோடு, மேலும் புதிது புதிதாக விகாரை அமைப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

# உவர்நிலத்தை மாற்றியமைக்க அங்கீகாரம் தரக்கோரிக்கை

வலிகாமம்தெற்கு,பெப்.4

நவாலியில் உவர்த்தன்மை காரணமாக நெற்செய்கைக்கு உட்படுத்த முடியாத நிலங்களை விவசாயத்துக்கு ஏற்றவையாக மாற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள வலிகாமம் தென்மேற்கு பிரதேச விவசாய குழுவினரின் அங்கீகாரத்தைப் பெற்றுத்தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கோரியுள்ளார்.

நவாலி சம்மேளனப் பிரிவில் உள்ள நவாலி தெற்கு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் 18 ஹெக்டேயர் நெற்காணி உவர்த்தன்மை காரணமாக நெற்செய்கைக்கு உட்படுத்தப்படாது உள்ளது. இந்த நிலத்தில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இந்த 18 ஹெக்டேயர் நிலத்தையும் நெற்செய்கைக்குப் பயன்படுத்த முடியும் என்று பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

நவாலி தெற்குப் பகுதியில் உவர்நீர், விவசாயக் காணியினுள் பரவுவதைத் தடுக்க கல்லுண்டாய் பிரதான வீதிக்குத் தெற்குப் புறமாக வீதிக்குச் சமாந்தரமாக 3 கிலோமீற்றர்கள் நீளமான உவர்நீர் தடுப்பு அணையைக் கல்லுண்டாய்ப் பாலத்தில் இருந்து கீரக்கைதீவு வரை அமைத்தல் -

நவாலி தெற்கில் கல்லுண்டாய் பிரதான வீதிக்கு வடக்குப் புறமாகக் கொத்துக்கட்டி வீதியின் இருபுறமும் உள்ள சுமார் 200 ஏக்கர் விஸ்தீரணமுடைய தரிசு நிலத்தில் (மேய்ச்சல் தரை) சுமார் 50 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நன்னீர் தேக்கக்குளம் ஒன்று அமைத்தல் -

ஆகிய இரு நடவடிக்கைகள் மூலம் மேற்படி உவர் நிலத்தை விவசாயத்துக்கு ஏற்ற நிலமாக மாற்றமுடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நடவடிக்கைகளுக்கு அங்கீகாரமளிக்கும்படியே அவர் கோரியுள்ளார். (ஒ-152)

# இன்னும் நான்கே நாள்கள்தான்!




## நினைவில் நின்றவை




மூன்றாவது உலகக் கிண்ணத்தை வென்ற மகிழ்ச்சியில் இந்திய அணி வீரர்கள் திளைப்பதையும், இந்திய அணித் தலைவர் கபில்தேவ் ஆட்டம் ஒன்றில் பந்தை விளாசுவதையும் காணலாம்.

## அணிகளின் விவரம்

### பாகிஸ்தான்

வக்கார் யூனிஸ் (அணித்தலைவர்), சயீட் அன்வர், சலீம் இலாஹி, சயிட் அவ்ரிடி, தௌபீக் உமர், இன்ஸமாம் உல் ஹக், யூஸுப் யஹானா, யூனுஸ்ஹான், வஸீம் அக்ரம், ரஷிட் லத்தீப், சக்லைன் முஸ்தாக், சொஹைப் அக்தார், அப்துல் ரஸாக், மொஹமட்சுமி, அஸார் மஹ்மூத்.

### நியூஸிலாந்து

ஸ்ரீபன் பிளமிங் (அணித்தலைவர்), அடம் பரேரோர், நதன் ஆஸ்லே, ஷேன் பொண்ட், கிறிஸ் கெய்ன்ஸ், கிறிஸ் ஹரிஸ், பிரண்டென் மெக்கலம், கிறேக் மெக்மிலன், கீல் மில்ஸ், ஜேக்கப் ஓராம், மத்தியூ சின்கிளயர், ஸ்கொட்ஸ் ஸ்டைரிஸ், டெரால் டப்பி, லோவன்சன்ட், டேனியல் வெட்டோரி.

## ஜக்கலிஸ் மற்றும் கிப்ஸ் பயிற்சியின்போது காயம்

### எனினும் ஆரம்ப ஆட்டத்தில் பங்கேற்பர்?

ஜொகனஸ்பேர்க்,பெப்.4

தென்னாபிரிக்க சகலதுறை ஆட்டக்காரர் ஜக் கலிஸ் மற்றும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹேர்ஸல் கிப்ஸ் ஆகியோர் ஞாயிறன்று பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள மே.இந்திய அணிக்கெதிரான உலகக் கிண்ண முதலாவது ஆட்டத்திற்கு முன்னர் அவர்கள் குணமடைந்து விடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.



கிப்ஸ்

ஷொட் ஒன்றுக்கு முயற்சித்த வேளை தோள்பட்டையில் சிறு கண்டல் காயத்துக்கு உள்ளானார். எனினும் நேற்று திங்கட்கிழமையும் அவர் பயிற்சியில் ஈடுபட்டார். இருந்தாலும் அவரது வலது தோளில் வித்தியாசத்தை அவர் உணர்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



கலிஸ்

கலிஸ் தனது கால்விரல் பகுதியில் காயமடைந்துள்ளார். நேற்று எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்ததில் அந்த இடத்தில் கண்டல்காயம் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. உலகின் முன்னணி சகலதுறை ஆட்டக்காரரான கலிஸ் 9ஆம் திகதி ஆடினாலும் அவருக்குப் போதிய பயிற்சி இருக்காது. அன்று அவர் ஆடினாலும் பந்து வீசமாட்டார்.

வீரர்கள் இருவரதும் காயங்கள் குறித்து கவலைப்படத் தேவையில்லை என்று அணியின் இயன் மருத்துவர் ஷேன் ஜப்பார் தெரிவித்தார். "இது குறித்து நான் கவலைப்படவேயில்லை" - என்றார் அவர். "கலிஸ் இந்த வாரத்தில் பயிற்சிகளை மேற்கொள்ளாமல் இருக்கவேண்டியதே தேவை" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிப்ஸ், பயிற்சியின் போது 'ஹுக

## களத்தடுப்பில் மொயின்கான் சாதனை!

உலகக்கிண்ணக் கிரிக்கெட்டில் களத்தடுப்புச் சாதனையாளர்களில் பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் மொயின்கான் முன்னணியில் உள்ளார். 20 போட்டிகளில் பங்குபற்றிய அவர் 23 பிடிகளை கைப்பற்றியதுடன் 7 ஸ்டம்புகளையும் செய்துள்ளார். அவருக்கு அடுத்ததாக பாகிஸ்தானின் வஸீம் பாரி உள்ளார். அவர் 18 பிடிகள் மற்றும் 4 ஸ்டம்புகளை எடுத்துள்ளார். (ம-5)



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்காக தென்னாபிரிக்கா சென்ற இங்கிலாந்து அணியை வழியனுப்பிவைத்த சிறுவன்.

## 3 ஆவது உலகக்கிண்ணம்

மூன்றாவது கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியும் 1983இல் இங்கிலாந்திலேயே நடந்தது. முதல் தடவையாக தெற்காசிய அணி ஒன்று கிண்ணத்தைவென்று புகழ்பெற்ற ஆட்டம் அது. ஜூன் மாதம் 25ஆம் திகதி மீண்டும் லோட்ஸ் மைதானத்தில் இறுதி ஆட்டம் இடம்பெற்றது. இருமுறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய மே.இந்தியத் தீவுகள் அணியும் இந்திய அணியும் அதில் மோதின.

ஆனால், அதற்கு முன்னர் இடம்பெற்ற சில ஆட்டங்கள் பற்றி இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். மிகப் பலமான அணியாக விளங்கிய மே. இந்திய அணியை, இந்தியா தான் சந்தித்த முதல் ஆட்டத்திலேயே வென்று அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனெனில் அப்போதெல்லாம் இந்திய அணி ஒரு எதிர்பார்ப்புக்குரிய பலமான அணியாகக் கருதப்படவில்லை. தொடர்ந்து ஜூன் மாதம் 18ஆம் திகதி சிம்பாப்வேயுடன் நடந்த ஆட்டத்திலும் இந்தியாவென்று பரபரப்பை ஏற்படுத்தியது.

அதற்கு முன் இரு போட்டிகளில் வென்று, இரு போட்டிகளில் தோற்றிருந்த இந்திய அணிக்கு சிம்பாப்வேயுடனான ஆட்டத்தையும் அதற்கடுத்த ஆட்டத்தையும் வென்றாலேயே அரை இறுதி ஆட்டத்துக்கு செல்லலாம் என்ற நிலை. நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பம் படுமோசமாக இருந்தது. அணியின் முன்னணி ஆட்டக்காரர்களான கவாஸ்கர், அமர்நாத், சந்தீப் பட்டேல், யஷ்பால் சர்மா ஆகியோர் ஒற்றை ஓட்ட எண்ணிக்கையுடன் ஆட்டமிழந்தனர். ஸ்ரீகாந்த் வாத்துடன் (டக்) ஆனார். 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்த மிக மோசமான நிலையில் இந்தியா தத்தளித்துக்கொண்டிருந்தது.

அந்த நிலையில் ஆட வந்த அணித் தலைவர் கபில்தேவ் நிதானமாக அசுர ஆட்டம் ஒன்றை ஆடித்தீர்த்தார் அவர். மறுமுனையில் பந்து வீச்சாளர் ரோஜர் பின்னி நிதானமாக ஆடிய இருவரும் ஓட்ட எண்ணிக்கையை 77ஆக உயர்த்தினார்கள். மீண்டும் சோதனை. 22 ஓட்டங்களுடன் பின்னி ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரவிசாஸ்திரி வந்த வேகத்தில் திரும்பினார். 7 விக்கெட்டுக்களை இழந்து வெறும் 78 ஓட்டங்கள் மட்டுமே பெற்ற நிலை. இனி இந்தியா அவ்வளவுதான் என்று நினைத்திருந்த நேரம் ஆடவந்த மதன்லாலுடன் இணைந்து தன் வித்தையைக் காட்ட ஆரம்பித்தார் கபில்தேவ். 17 ஓட்டங்களுடன் மதன்லால ஆட்டமிழந்தார். அதற்குள் இந்தியாவின் எண்ணிக்கை 140. தளரவில்லை கபில்; தன் அதிரடியைத் தொடர்ந்தார். அடுத்து வந்த ... மறுமுனையில் நின்று கொடுக்க சிம்பாப்வே வீரர்களின் பந்துகளை மைதானத்தின் நாற்புறமும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## களம் காண்கிறது தென்னாபிரிக்கா

கிரிக்கெட் விளையாடும் நாடுகளில் உலகக்கிண்ணப் போட்டிகளில் துரதிஷ்டத்தால் பாதிக்கப்பட்ட அணி யென பலராலும் வர்ணிக்கப்படுகின்ற அணி தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியாகும்.

1975இல் முதலாவது உலகக்கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்காவால் பங்கேற்க முடியாதுபோனது. இனவாதம் காரணமாக அந்நாட்டுக் கிரிக்கெட் அணி சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்ளத் தடைவிதிக்கப்பட்டதே இதற்குக்காரணமாகும்.

தொடர்ந்து முதல் நான்கு உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணி பங்கேற்கவில்லை. இதன் பின்னர் தடைநீக்கப்பட்டதும் 1992 இல் முதல்தடவையாக உலகக் கிண்ண போட்டியில் பங்குபற்றியது அந்த அணி. அத்தொடரில் அரையிறுதி வரை முன்னேறியபோதும சர்ச்சைக்குரிய விதிகள் அவ்வணி வெற்றிபெறுவதைத் தடுத்தன.

இங்கிலாந்துடன் நடைபெற்ற இவ்வரையிறுதி ஆட்டத்தில் வெற்றி இலக்கைநோக்கி முன்னேறிய தென்னாபிரிக்க அணி இறுதி 13 பந்துகளுக்கு 22 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் மழைகுறுக்கிட்டது. இதனால், தடைப்பட்ட ஆட்டம் மீண்டும் தொடர்ந்த போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விதியின் பிரகாரம் ஒரு பந்துக்கு முகம் கொடுத்து 22 ஓட்டங்கள் பெ... வேண்டிய நிர்ப்பந்திக்கப்பட்டதனால ... தது.

அதேபோல 1996 ... உலகக்கிண்ண கிரிக்கெட் ... யின் கால் இறுதியில் மேற்கிந்திய தீவுகள் அணியிடம் அதிர்ச்சித்தோல்வி அடைந்தது. இறுதியாக நடைபெற்ற உலகக்கிண்ண போட்டியில் தென்னாபிரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததனால் இறுதிப்போட்டிக்கு செல்லும் வாய்ப்பை தென்னாபிரிக்க

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிரேக் வைற் ஆடுவது சந்தேகம்


ஜொகன்னஸ்பேர்க்,பெப்.4



வைற்

இங்கிலாந்தின் சகலதுறை ஆட்டக்காரர் கிரேக் வைற் இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றுவது தொடர்ந்தும் சந்தேகத்துக்கு இடமாகவுள்ளது. ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற வி.பி. கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 33 வயதான வைற் காயமடைந்தார். அவரது காயம் பாரியதாக இருந்ததனால் அவர் உலகக் கிண்ணப் போட்டியில் ஆடுவது சந்தேகம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவர் இங்கிலாந்தின் 15 பேர் கொண்ட அணியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

ஆனால், அவர் நேற்றுவரை போட்டியில் பங்குபற்றுவதற்கான உடல் தகுதியை பெற்றிருக்கவில்லை என இங்கிலாந்து அணிப் பேச்சாளர் தெரிவித்தார். இருந்தாலும் அவரது உடற்தகுதியை பரிசோதிப்பதற்கான இறுதி சந்தர்ப்பம் நேற்று, நாள் முழுவதும் வரை வழங்கப்பட்டிருந்தது. நேற்று ... பயிற்சிக் களத்துக்கு செல்லாதிருந்தால் ... அவர் தகுதி பெறாமல் போட்டியில் பங்குபற்றாக்கூடும்.



... திகதி ஆரம்பமாக உள்ள கிரிக்கெட் உலகக்கிண்ணப் போட்டி ... நியூலான்ட் மைதானத்தில் நடந்த ஒத்திகை ... போன்ற வடிவத்தில் கலைஞர்களின் நடனம் ... காட்சி.

உங்கள் அதிர்ஷ்டத்தை சோதிப்போமா? உதயனுடன் இணைந்திருங்கள்!

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

B.P.Solar (சோலர்) 70 Watts விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.தயாளன் (மகளிர் கல்லூரிக்கு முன்பாக), மானிப்பாய். (14027)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதி விசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 06-02-2003 அன்று விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13976)

### வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 3 அறையுடன்கூடிய வீடு விலைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1769, மே/பா உதயன். (14047)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 27 வயது, அனுஷம், பாவம் 50, வெளிநாட்டில் நிரந்தர உத்தியோகத்திலுள்ளவருக்குப் பொருத்தமான மணமகள் தேவை. முழுவிவரங்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும். 'ராஜகிரி', மேல்மாடி, 2ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை. (14054)

## வலிகாமம் மேற்கில் நெல் விளைச்சல் அமோகம்

வலி.மேற்கு,பெப்.4

வலி.மேற்குப் பிரதேசத்தில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்முறை அமோக விளைச்சல் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை, சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களிலுள்ள பெரும்பாலான வயல் நிலங்களில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. பரப்புக்கு சுமார் 3 புசல் நெல் விளைச்சல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பல இடங்களிலும் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டதனால் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. (ஒ-175)

## தொல்புரம் சந்தையில் அபாயநிலை

வலி.மேற்கு,பெப்.4

தொல்புரம் மத்தியிலுள்ள பொதுச் சந்தைக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாகவும் -

இதனால், இச்சந்தைப் பகுதியில் நடமாட வியாபாரிகளும் பொதுமக்களும் அஞ்சுவதாகவும் -

பலவருடங்களாக இச்சந்தையின் கட்டடங்கள் திருத்தப்படாமல் இருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இச்சந்தைக் கட்டடத்தை திருத்தியமைக்குமாறு இப்பகுதியிலுள்ள பொது அமைப்புகள் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லையென்றும் தெரிய வருகின்றது. (ஒ-175)

## ஒன்பதாம் தரத்தில் விருப்பப் பாடங்கள்

அச்சுவேலி,பெப்.4

பாடசாலைகளில் 9ஆம் தரத்தில் இருந்து விருப்பத்திற்குரிய பாடங்கள கற்பிக்கப்படவுள்ளன. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறையின் பிரகாரம் 10ஆம், 11ஆம் தரங்களில் விருப்பத்திற்குரிய பாடங்கள் கற்பிக்கப்பட்டு ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் பிரதான பாடங்கள எட்டு மற்றும் விருப்பத்திற்குரிய பாடங்கள் இரண்டு ஆக மொத்தம் பத்துப் பாடங்களுக்கு மாணவர்கள் தோற்ற வேண்டும்.

இதுவரைகாலமும் 10ஆம் தரத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட விருப்பத்திற்குரிய பாடங்கள் எதிர்காலத்தில் 9ஆம் தரத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

விருப்பத்திற்குரிய பாடங்களாக தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம், சிங்கள இலக்கியம், வரலாறு, புவியியல், அபிவிருத்திக் கல்வி, சுகாதாரமும் உடல்நலக்கல்வியும் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களை மாணவர் தெரிவுசெய்யலாம்.

விருப்பத்திற்குரிய பாடங்களுக்கு வாரந்தோறும் இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-11)

---

உ

# 'மருதடியான் ஓங்காரம்'

## ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

ஆக்கியோன்:

'மஹா வித்துவான்' 'முத்தமிழ்சுரபி' 'கலாபூஷணம்'

பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் (M.A.) அவர்கள்

பாடியவர்கள்:

1. சங்கீதபூஷணம் செ.குமாரசாமி
2. கலாவித்தகர் இ.குகானந்தன்
3. கலாவித்தகர் செல்வி ந.ஜெயபாரதி

இசையமைப்பு:
இசைக்கலைமணி ந.செல்வச்சந்திரன்

பிரதமவிருந்தினர்:
பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

*இடம்:* மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.
*காலம்:* 05.02.2003 புதன்கிழமை மாலை 6 மணி.

### நிகழ்ச்சி நிரல்

தேவாரம்: அறநெறிப் பாடசாலை மாணவர்கள்
*(மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானம்)*

வரவேற்புரை: திரு.எஸ்.கே.உதயசூரியர் அவர்கள்
*(முகாமைத்துவ தர்மகர்த்தா மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாசபை)*

வாழ்த்துரை: சிவத்தமிழ் வித்தகர் நா.சிவமகாலிங்கம் அவர்கள்
*(உதவிப் பணிப்பாளர், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு)*

தலைமையுரை: திரு.ந.சிதம்பரநடராசா அவர்கள்
*(தலைவர் - தர்மகர்த்தா சபை)*

சிறப்புவிருந்தினர் உரை:
கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை அவர்கள்
*(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர், சங்கீதம்)*

பிரதமவிருந்தினர் உரை:
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
*(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*

ஒலிநாடா வெளியீடு:

முதற்பிரதி பெறுபவர்:
திரு.ச.திருவாஞ்சீஸ்வரன் அவர்கள்
*(விஸ்கம் ரேட்ஸ், மானிப்பாய்)*

ஆய்வுரை: சங்கீதபூஷணம் L.திலகநாயகம்போல் அவர்கள்
*(ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர், சங்கீதம்)*

கலைஞர்கள் கௌரவிப்பு:

பதிலுரை: ஸாஹித்யகர்த்தா பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் M.A.

நன்றியுரை: திரு.எஸ்.சுரேஸ்குமார் அவர்கள்
*(செயலாளர் - வழிபடுவோர் சங்கம்)*

*மருதடியான் புகழ் பருக அனைவரும் வாரீர்!*

**மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில் தர்மகர்த்தா சபையினரும், வழிபடுவோர் சங்கத்தினரும்.** (14046)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி தங்கமுத்து இரத்தினசபாபதி

(பேபி அக்கா)

ஓராண்டு சென்றாலும் எம்
துயரம் நீங்காது அம்மா!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*மக்கள்:-* சரோஜா, சகுந்தலா, சஜிற்.
*மருமக்கள்:-* கந்தசாமி, ஞானாஸ், நளாஜினி.
*பேர்த்தி:-* சஜித்தா.

*துரைவில்லா,*
*உடுவில்.* (14050)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் கிழக்கு J/189
கிராம உத்தியோகத்தர்

## திரு. தி.புரந்தரராசன்

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் Iஇற்குப் பதவியுயர்வு அடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

த.யோகராசா, செ.சிவராசா, கு.முருகையா, சு.தட்சணாமூர்த்தி, இ.குமாரதாசன், சி.சொக்கலிங்கம் குடும்பம், நாதன் சகோதரர்கள்.

*கே.கே.எஸ். வீதி,*
*இணுவில் கிழக்கு.* (14043)

---

### கொக்குவில் இந்துக் கல்லூரி - பழைய மாணவர் சங்கம்

## கணனி இயக்குநர் தேவை

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க தகவல் தொழில்நுட்ப மையத்தில் கணனி இயக்குநராகப் பணியாற்றத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிவரத்துடன் 10.02.2003 ஆம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

(C/26342)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஊரோடு உறவாடி உன்னதமான தங்கள்
உழைப்பால் உயர்வு பெற்று மாதகல் மக்களின்
மனங்களில் நிறைந்து நிற்கும்

## உயர்திரு.ந.நாகராசா
## உயர்திரு. பி.யோகராசா

ஆகியோர் தரம் I கிராம உத்தியோகத்தர்களாக உயர்வு பெற்றமையை நாம் மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர்கள் தம் பணியில் இன்னும் பல உயர்வுகள் பெற்று மக்களின் சேவையே மகேசனின் சேவையாக ஏற்று ஏற்றமுடன் வாழ இறையேசுபதம் வேண்டி நிற்கும்:

கலைஞானகேசரி அகஸ்ரீனும்
மாதகல் வளர்மதி கலாலயமும்.

*மாதகல்.* (14044)

---

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

*மண்ணகம்* 06 - 01 - 1932



*விண்ணகம்* 22 - 12 - 2002

## திருமதி பரமசாமி இலட்சுமி

***அன்பின் உறைவிடமே அகல் விளக்காய் ஒளிவீசி***
***இகவாழ்வின் பொழுதெல்லாம் இழந்தபின்***
***இன்றும் எம் துணையாகி வழி காட்டும்***
***உங்கள் நீங்காத நினைவுகள்.***

ஆத்மா சாந்தி அடைவதாக!

இன்று (04.02.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகள், மருமகன், பேரப்பிள்ளை, சகோதரர்கள்.

*35,கச்சேரி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (14022)

---

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லப்பா அன்னம்மா

குமரகோட்டம், கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி செல்லப்பா அன்னம்மா 02.02.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா, கனகசிங்கம் மற்றும் கந்தப்பிள்ளை, அன்னமுத்து காலஞ்சென்ற நல்லம்மா, அருளம்மா, அழகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் யோகசவுந்தரி, இராசலட்சுமி, கமலாதேவி, சிவசுப்பிரமணியம் (சுவிஸ்), தருமேஸ்வரி (சுவிஸ்), சிவகுமாரன் (சுவிஸ்), சிவசக்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாயகம், கிருபானந்தன், பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), புஸ்பகுமார் (சுவிஸ்), லலிதா (சுவிஸ்), சிவாஜினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.செல்வநாயகம்
(மருமகன்)

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.* (14048)

உதயன்

## சுதந்திர தினச் சிந்தனை

இன்று இலங்கையின் சுதந்திரதினம்.

ஐம்பத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்தத் தினத்தில்தான் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கொடி இலங்கையில் இறக்கப்பட்டு சுதந்திர இலங்கையின் சிங்கக்கொடி ஏற்றப்பட்டது.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை ஆட்சியாளர்கள் - எஜமானர்கள் - மாறியதைத் தவிர, வேறெதுவும் செயலில் நடக்கவில்லை. சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இன்றுவரை கிட்டவில்லை.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கு பிரிட்டிஷார் முன்வந்த சமயத்திலேயே இலங்கையில் தமிழர்களின் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் உறுதி வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்ற வற்புறுத்தலும் கோரிக்கையும் தமிழர் தரப்பில் இருந்து பலமாக முன்வைக்கப்பட்டன. ஆனால், சிங்களத் தலைவர்களின் ஏமாற்றுத்தனமும் அப்போதிருந்த தமிழர் தலைமைகளின் ஏமாளித்தனமும் சேர்ந்து தமிழர்களை அடிமைப் படுகுழியில் வீழவைத்துவிட்டன. சிங்களத் தலைவர்களின் ஜால வார்த்தைகளுக்கு - பசப்புரைகளுக்கு - தமிழர் தலைமை எடுபட்டதால், அவர்களின், 'ஆசைகாட்டி மோசம் செய்யும்' வலையில் தமிழர் தரப்பு வீழ்ந்து அடிமைப்பட்டுப்போகும் நிலை ஏற்பட்டது.

சுதந்திரமடைந்த ஒரு நாடு தனது சுதந்திர தினத்தை எடுப்பாகக் கொண்டாடுவது தவறல்ல. அது மரபு ரீதியான முறையே. நாட்டையும் நாட்டின் சுதந்திரத்தையும் கௌரவிக்கும் வகையில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் அமைவதும் வழமையே.

ஆனால், அந்த சுதந்திரத்தை நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் உரியமுறையில் அனுபவிப்பதற்கு நடைமுறை ஏற்பாடுகளைச் செய்தால்தான் சுதந்திரத்துக்கும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கும் ஓர் அர்த்தம் இருக்கும்.

'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாரதியார்.

இங்கு தனி ஒருவனுக்கு அல்ல - தனி ஓர் இனத்துக்கே சுதந்திரம் இல்லை; அது அடிமைப்பட்டுக்கிடக்கும் இனம் என்றாகிவிட்டது.

சொந்த இடத்தில் குடியிருக்க அனுமதியில்லை. இராணுவக் கெடுபிடி தொடர்கின்றது. இந்தச் சீத்துவத்தில் சுதந்திரதினம் என்ன வேண்டிக் கிடைக்கின்றது? - என்று வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் எழுப்பியிருக்கும் கேள்வியில் அர்த்தங்கள் நிறைய உள்ளன.

யாழ்.குடாநாட்டில் மட்டுமல்ல, வவுனியாவிலும் கிழக்கிலும்கூட இராணுவ ஆக்கிரமிப்பு இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான பெரும் அடக்குமுறைகளில் ஒன்றாக விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

யாழ்.குடாநாட்டில் முப்பது சதவீதப் பிரதேசத்தை - அங்குள்ள மக்களை விரட்டியடித்து விட்டு - அரச படைகள் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு நிற்கின்றன.

வவுனியா மாவட்டத்திலும் மக்களின் முப்பது சதவீதப் பிரதேசம் இப்படி ஆக்கரமிக்கப்பட்டுள்ளதாக வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் சுட்டிக்காட்டுகின்றது. விவசாயப் பிரதேசமான வவுனியாவில் 52 நீர்ப்பாசனக்குளங்கள் படையினரின் ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ளன.

இப்படி, சந்ததி சந்ததியாக வாழ்ந்த மக்கள், தமது பாரம்பரிய பூமியிலிருந்து - சொந்த வாழ்விடங்களில் இருந்து - தாயக மண்ணிலிருந்து - விரட்டியடிக்கப்பட்டு அகதி முகாம்களில் நிர்க்கதியாக நிற்கும் நிலை.

தமது பிரதேசங்களில் இருந்து கடற்றொழிலுக்கோ, விவசாயத்துக்கோ செல்ல அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் தமது குடும்பத்துக்கு அன்றாட வருமானமின்றி - வாழ்வாதார வழியின்றி - அல்லலுறும் இக்கட்டு.

கடந்த வருடம் வந்த யுத்தநிறுத்தத்தோடு எல்லோர் மனதிலும் ஓர் உற்சாகம் பிறந்தது உண்மைதான். தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி சந்தோஷமாக வாழலாம் என்ற தமிழர்களின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிவிட்டது.

"சுதந்திரம் கிட்டாமல் அடிமைப்பட்டு, சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டு, அவல வாழ்வு வாழும் எமது இனத்துக்கு சுதந்திரதினம் என்ன வேண்டிக் கிடக்கின்றது?" என்று வவுனியா வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் எழுப்பும் கேள்வியில் அர்த்தமும் ஆழமும் நிறைய இருப்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள முன்வரவேண்டும்.

சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் அர்த்த புஷ்டியுள்ளவையாக்க இப்போதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# யுத்தநிறுத்தம் ஏற்பட்டாலும் சகஜநிலை உருவாகவில்லை!

## விநாயகமூர்த்தி எம்.பி. உரை

செம்பியன்பற்று,பெப்.4

யுத்தநிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் தமிழ் மக்களின் வாழ்க்கையில் சகஜ நிலை ஏற்படவில்லை.

அண்மையில் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் 12 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 2 மாடிக் கட்டடத்தைத் திறந்துவைத்து பேசிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி குறிப்பிட்டார்.

அங்கு விநாயகமூர்த்தி எம்.பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் மக்களின் இருப்பிடங்களில் நிலைகொண்டுள்ள படையினர், அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமரவிடாது தடுத்து வருகிறது. இப்படித் தடுக்கும் பட்சத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் பலாத்காரமாகக் குடியமரவேண்டி வரும்.

தென்பகுதியில், கட்டுநாயக்கா, நீர்கொழும்பு போன்ற இடங்களில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள போதிலும் அங்கு மக்கள் குடியிருக்கிறார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் மட்டும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள தமிழ் மக்களை மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலை தொடருமானால் கூட்டமைப்பு எம்.பிக்களான நாம் 15 பேரும் எமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை கைவிடும் நிலை உருவாகலாம். இது குறித்து நான் பல தடைவைகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துக் கூறியுள்ளேன்.

கடந்த காலப் போர் அனர்த்தங்களால் தென்மராட்சியில் இருந்து ஒருலட்சம் மக்களும், வலிகாமத்திலிருந்து ஒருலட்சம் மக்களும் இடம்பெயர்ந்து தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாது அவதியுறுகின்றார்கள்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களை அவர்களது சொந்த வீடுகளில் குடியமர இடமளிக்க வேண்டும். புலோலி பல்லப்பைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் முகாமிட்டு இருப்பதனால் இங்கு வசித்து வந்த 50 குடும்பங்கள் வீடுகளை இழந்து அகதிகளாக வாழ்கின்றன. இந்த நிலைமை முற்றாக மாற்றப்பட வேண்டும் என்றார். (ஒ-36)

## எமது இனம் என்ற பற்றுடன்

# நேரம், காலம் பாராது அதிகாரிகள் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்!

## 'சிரான்' பிரதிநிதி வேண்டுகோள்

வலி.மேற்கு,பெப்.4

"இன்றைய காலகட்டத்தில் நேரம், காலம் பாராது மக்களுக்குச் சேவையாற்ற அரச அதிகாரிகள் அனைவரும் திட சங்கற்பம் கொள்ளவேண்டும்" இவ்வாறு சிரான் பிரதிநிதி கலாநிதி வி.அம்பலவாணர் வேண்டுகோள் விடுத்தார்.

சங்கானைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலாநிதி வி.அம்பலவாணர் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வெளிநாடுகள் பெருமளவு நிதியை வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வழங்கவுள்ளன. இச்சந்தர்ப்பத்தை நாம் அனைவரும் முழுமையாகப் பயன்படுத்தி எமது பிரதேசங்களை அபிவிருத்தி அடையச் செய்யவேண்டும். எமக்கிடையே எமது நாடு, எமது இனம் என்ற பற்று இருக்கவேண்டும். இடம்பெயர்ந்து சென்று இன்று மீளக்குடியமர்வதற்கு வருகின்ற மக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லற்படுகின்றனர்.

இந்த மக்களின் அடிப்படை வசதிகளை அதிகரிப்பதற்கு காலம், நேரம் பாராது சேவை மனப்பான்மையுடனும் எமது மக்கள் என்ற உணர்வுடனும் பணிபுரிய அரச அதிகாரிகள் தம்மைத் தயார்படுத்த வேண்டும். கிராமிய மட்டத்தில் பணிபுரியும் அதிகாரிகளிடையே விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும். கிராம மட்டத்திலுள்ள சமூக அமைப்புகள் தமது மக்களுக்குத் தேவையான திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

மக்களின் குறைபாடுகளையும் தேவைகளையும் இனங்காணவேண்டிய பாரிய பொறுப்பும் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றை நிறைவேற்ற வேண்டிய கடமையும் சமூக அமைப்புகளிடம் இன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதலால் சமூக அமைப்புகளிலுள்ள பிரதிநிதிகள் செயற்றிறன் உள்ளவர்களாக இருக்கவேண்டும். நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை விழிப்புணர்வுடன் கவனிப்பவர்களாகவும் இருக்க வேண்டியது இன்றைய சூழ்நிலையில் அவசியமாகும்.

மீளக்குடியமர்ந்த மக்கள் 25ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை அவசியம் என்று அரச அதிபர் குறிப்பிட்டுள்ளதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. தேசிய அடையாள அட்டை இல்லாமல் ஆயிரக்கணக்கானவர்கள் இருப்பதாகவும் தெரியவருகின்றது. இந்நிலையில் நான் கொழும்பு சென்றதும் இதற்கு ஒரு நல்ல தீர்வினைக் காண்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வேன்.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக ஆலயக் காணிகளில் குடியிருக்கின்றன. ஆனால், இக் காணிகள் அவர்களுக்கு ஆவண ரீதியாக சொந்தமாக இல்லை. இதனால் சேதமடைந்த அவர்களின் வீடுகள் திருத்தி அமைக்க முடியாமல் இருப்பதாகவும் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளில் குடியிருக்கும் மக்கள் தமது சேதமடைந்த வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன் - என்று அவர் தெரிவித்தார். (ஒ-175)

# நுண்கலைத்துறையில் இந்திய புலமைப்பரிசில்

## விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

கொழும்புத்துறை,பெப்.4

கலாசாரத் தொடர்புகளுக்கான இந்திய மன்றம் இசை, நடனம் மற்றும் சித்திரம் ஆகிய நுண்கலைத் துறைகளை இந்தியாவில் கற்க விரும்புவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களைக் கொழும்பிலுள்ள இந்தியக் கலாசார மையம் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் 20 - 25 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். ஜி.ச.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும் நடனம், சங்கீதம் அல்லது சித்திரம் போன்ற விண்ணப்பிக்கும் பாடத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்க வேண்டும். மேலும் ஜி.ச.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியைப் பெற்றிருக்கவேண்டும். இந்தத் தகுதிகளைப் பெற்றவர்கள் விண்ணப்பப்படிவங்களை இலக்கம் 133, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 04 என்ற முகவரியில் உள்ள இந்திய கலாசார மையத்தில் அலுவலக நாள்களில் முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் முறைப்படி பூர்த்திசெய்யப்பட்டு, இது தொடர்பான ஒலி, ஒளி நாடாக்கள் மற்றும் புகைப்படப் பிரதிகள் இணைக்கப்பட்டு, இந்தியத் தூதுவராலயத்தில் எதிர் வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கும் 5 மணிக்கும் இடையே நேரடியாகக் கையளிக்கப்படவேண்டும்.

இது தொடர்பாக மேலதிகத் தகவல்களைப் பெறவிரும்புவோர் 01 - 500014 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இந்திய கலாசார மையம் அறிவித்துள்ளது.

### நாளை

தை 22

புதன்கிழமை

(05.02.2003)

திதி : சதுர்த்தி

முன்னிரவு 8.36வரை.

நட்சத்திரம்: உத்திரட்டாதி

முழுவதும்

சுபநேரம் : 5.05 - 5.25

ராகுகாலம் : 12.35 - 2.05

(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கொள்கையற்றவர்களிடமிருந்து நீதியை எதிர்பார்ப்பது மூடத்தனமாகும்.

# பாடசாலைச் சங்கங்களின் நிதிகள் குறித்து பரிசீலனை

## மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பழைய மாணவர் சங்கங்கள் ஆகியவற்றின் நிதிநிலை விவரங்களை மாகாணக் கல்வி அமைச்சு பரிசீலனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனையடுத்து மேற்படி விவரங்கள் குறித்த விவரங்கள் திரட்டப்படுகின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் ஆகியவற்றின் வரவு - செலவுகள், நிதி வளங்கள், வங்கிக் கணக்குகள் தொடர்பான விவரங்களை முதற்கட்டமாக மாகாணக் கல்வி அமைச்சு தற்போது சேகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

தனித்தனியாக இரண்டு சங்கங்களின் நிதி வளங்களையும் பரிசீலனை செய்வதற்கு வசதியாக விசேட படிவங்கள் மூலம் இந்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் பல இடங்களில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் நிதி மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் நிதி என்பன நிதிப் பிரமாண நடைமுறைகளுக்கு மாறுபட்ட விதத்தில் கையாளப்பட்டிருப்பதாகவும் நிதி மோசடிகள் நடைபெற்றிருப்பதாகவும் பல்வேறு முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

இதனைத் தொடர்ந்தே மேற்படி சங்கங்களின் நிதி தொடர்பான விவரங்களை மாகாணக் கல்வி அமைச்சு திரட்டிப் பரிசீலனைக்குட்படுத்த உள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(ஒ-11)

## மருதனார்மடம் பகுதியில்

# காற்றில் அலையும் பொலித்தீனால் மின்மாற்றி பழுதடைய வாய்ப்பு

## மின்சாரசபை அலுவலர் எச்சரிக்கை

வலிகாமம் தெற்கு,பெப்.4

மருதனார்மடம் சந்தையிலிருந்து அருகில் உள்ள மின்மாற்றி நிலையத்தினுள் காற்றில் அடிப்பட்டுச் செல்லும் பொலித்தீன் தாள்கள் மின்மாற்றி இயந்திரத்தைப் பழுதடையச் செய்யும் வாய்ப்புகள் இருப்பதாக சுன்னாகம் மின்சாரசபை மின்சார மேற்பார்வையாளர் ஏ.நாகராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

மருதனார்மடம் சந்தைப் பகுதியில் இருந்து தினமும் கழிவுகள் மற்றும் பொலித்தீன் தாள்கள், பைகள் காற்றினால் பறந்து வந்து மின்மாற்றி நிலையத்தினுள் செல்கின்றன. இவை காற்றில் பறந்து மின்மாற்றி இயந்திரத்திக்குள் சிக்குவதினால் மின்மாற்றி பாதிப்படைய வாய்ப்புகள் உண்டு.

ஆகவே, இக்கழிவுகளை வீதிகளில் இடுவதைத் தவிர்க்குமாறு அவர் கோரியுள்ளார். (ஒ-152)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 - 12 - 1966



விண்ணில் 26 - 02 - 2001

### அமரர் மகாலிங்கம் சித்திரா (கலா)

*திதி: 04.02.2003*


பாடித்திரிந்த குயிலே! பாசமிகு குலவிளக்கே!
பறந்தது ஏனோ எமைவிட்டு - பாரினிலே உனை இழந்து
பரிதவிக்கிறோம். தினமும் எமை நினைந்து
பார்த்திரம்மா! வானில் நாம் வருவோம்
பகிர்ந்திடுவோம் உன் பிரிவால்வந்த துயரை.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கு.குணரத்தினம் (தந்தை) - குடும்பத்தினர்
*மாரியம்மன் லேன், திருநெல்வேலி.* (14025) அனைவரும்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

05.02.2003

HAPPY



BIRTHDAY

திரு-திருமதி திருநாகராசா - மதிவதனி தம்பதிகளின் அருமைப் புதல்வன்

### தி.தினேஷ்

தனது முதலாவது பிறந்தநாளை (05.02.2003) ஜேர்மனியில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பம்மா, அன்பு அக்கா மீரா, பெரியப்பா, பெரியம்மா, பபா சித்தப்பா, அம்மம்மா, அம்மப்பா, மாமமார், சித்திமார் ஆகியோர் நுணாவில் குளம் கண்ணகை அம்பாளின் திருவருளால் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. - பெரியப்பா குடும்பத்தினர்.

(14021)

## மோ.சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,பெப்.4

பருத்தித்துறை மந்திகை மருத்துவமனைக்கு அருகில் நேற்றுமுன்தினமிரவு மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி (வயது44), பருத்தித்துறையைச் சேர்ந்த இராசமாணிக்கம் சுதாகரன் (வயது24), நாகர்கோவில் தெற்கைச் சேர்ந்த கந்தசாமி தவசீலன் (வயது23) ஆகிய மூவருமே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-9)

## திடீர் மழையால் அறுவடை பாதிப்பு

கைதடி.பெப்.4

குடாநாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பெய்த "திடீர் மழையினால்" நெல் அறுவடை பாதிப்புக்குள்ளாகியதாக கூறப்படுகின்றது.

நாவற்குழி, தச்சன்தோப்பு ஆகிய இடங்களில் முதல் நாள் வெட்டப்பட்டு மறுநாள் சூடு மிதிப்பதற்காக வைக்கப்பட்ட கதிர்கள் மழையில் நனைந்து சூடு மிதிக்க முடியாதவாறு காணப்படுகின்றது. வல்லைவெளி வயல்களிலும் இதேநிலையே தோன்றியுள்ளது.

(ஒ-75)

## கட்டுரை மஞ்சரி அறிமுக விழா

கைதடி,பெப்.4

இளம் எழுத்தாளர் செல்வி தி. உதயலதாவின் "கட்டுரை மஞ்சரி" என்ற நூலின் அறிமுக விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ், யாழ்.மனித முன்னேற்ற நடுநிலைய இணைப்பாளர் எஸ்.ஜோசபபாள உட்பட பலரும் கலந்துகொள்ள உள்ளனர்.

(ஒ-75)

## 18ஆவது வருட அஞ்சலி



அமரர்

### நாராயணசாமி இராமசாமி

பிறப்பு 03-04-1920 இறப்பு 04-02-1985

ஆண்டுகள் பதினெட்டு ஓடி மறைந்தாலும்
ஐயா உம் நினைவுகள் மறையவே மறையாது!

*உங்கள் நினைவில் வாழும்:*
மக்கள், மருமக்கள்,
மைத்துனர்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்*
*119,39/2 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*
*ஆஷிகா மிக்ஷர், பலாலி வீதி,*
*திருநெல்வேலி.* (14030)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 29 - 11 - 1928



உதிர்வு 05 - 01 - 2003

### அமரர் முருகேசு கனகேஸ்வரி

கனகமணி விளக்கே கனகேஸ்வரித் தாயே!
கண் துஞ்சாது, கண் அயராது காத்து வளர்த்தாயே!
காணுமிடமெல்லாம் உன் தோற்றம் தெரியுதம்மா
காண்பானும் காட்சியும் அற்ற இடம் சேர்ந்தாயோ?

இன்று (04.02.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது தாயாரின் வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகியவற்றிலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.7, புகையிரத வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (14000)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.


சுடர் ஒளி 04-02-2003 இதழில்




✣அரசியல் சர்ச்சையில் தள்ளாடும் யாழ்ப்பாண நூலகத் திறப்பு விழா
✣இராணுவ வல்லுநர்களின் வெளிப்பாடும் சமாதானத் தரப்பினரின் முரண்பாடும்
✣ஏ-9 வீதியைப் புனரமைக்க ஏற்பாடு பயணத்திற்கு புதிய பாதைகள் மாற்றீடு
✣தட்டிக்கேட்போர் இல்லாவிட்டால் தட்டிச் சுற்றுவோர்பாடு கொண்டாட்டம் (தேரடி)
✣சிறுவர்கள் தொடர்பான பொய்ப்பிரசாரம் புலிகளின் பணியால் உலகிற்கு அம்பலம்
✣திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை

சிறுகதை, க்ரைம், கவிதைப்புனல், அலைகளின் காவியம், சினிமா, இணையத் தளங்களில் இருந்து, கலையமுதம், மலையகம் மற்றும் பக்கத்து வீட்டு நிகழ்வுகள் போன்ற பல அம்சங்களுடன்.

(C/26338)

# வாசகர் திருமுகம்

## பல்கலை அனுமதியில் பாதிப்பு யாழ்.மாவட்டத்திற்கு மட்டுமா?

2002 - 2003 பல்கலைக்கழக அனுமதி விடயம் சம்பந்தமாக தங்களது பத்திரிகையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை மட்டும் குறித்த சங்கம் அறிக்கைமூலம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம் மற்றும் தமிழ் மாவட்டங்களின் நிலைமையைப் பற்றி சிறிதும் வெளிப்படுத்தப்படவில்லை.

குறிப்பாக வன்னி மாவட்ட மாணவர்கள் எதுவித அடிப்படை வசதியும் இன்றி கல்விகற்று உரிய அனுமதியைப் பெறமுடியாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டவில்லை. வெறுமனே அறிக்கை விடுவதைவிட்டு கல்விமான்களை ஒன்றுகூட்டி உரிய முறையில் ஒரு கட்டமைப்பு ஒன்றை உருவாக்கிப் போராடவேண்டும். இதையே பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர்.

வெறும் மேடைப் பேச்சுக்களாலோ, அறிக்கைகளாலோ எதுவும் நிகழப் போவதில்லை. அரசியல்வாதிகளும் உதவப்போவதில்லை.

குறிப்பாக 'சூரியகதிர்' நடவடிக்கையின்போது யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றனர். அவர்களது பிள்ளைகள் அங்கு கல்வி கற்று கிளி., முல்லை மாவட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்ட கோட்டாவிலும் பயன் அடைந்தனர். இதனால் அந்த மாவட்ட மக்களும் பாதிக்கப்பட்டனர். இதை எடுத்துக்கூற ஒருவரும் முன்வரவில்லை.

நான் கிளிநொச்சியில் வசித்த வேளையில் (கடந்த 7 வருடமாக) இதுபற்றி கல்வி அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன். ஆனால், தற்போதைய கல்வி அமைச்சரைத் தவிர மற்றவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. தற்சமயம் கிளிநொச்சிக்கு ஒதுக்கப்பட்ட மருத்துவபீட மாவட்ட கோட்டா நாலிலிருந்து ஆறாக அதிகரிக்கப்பட்டுள்ளதை அறிந்து நான் சந்தோஷம் அடைகிறேன்.

மருத்துவ மாணவர்கள் படிப்பதற்கு மட்டும் போராடாமல், மக்கள் சேவைக்கு படித்து முடித்த பின்னரும் முன்வரவேண்டும். அப்போது எமது பகுதியில் மருத்துவர் தட்டுப்பாடு இருக்கமாட்டாது என்பது எனது அபிப்பிராயமாகும்.

*ஊரெழு கிழக்கு.* **கதிரேசு சிவசுப்பிரமணியம**

## முகமாலை, கிளாலி மக்கள் மீளக்குடியமர உதவி செய்வது யார்?

2000ஆம் ஆண்டு முற்பகுதியில் நடைபெற்ற போர் அனர்த்தங்களால் பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம், பகுதிகளில் பல கஷ்டங்களுக்கு மத்தியில் சீவித்துவருகின்றனர்.

அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏ-9 வீதி திறக்கப்பட்டுள்ளது. இதனால் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் முகமாலை, கிளாலி மக்கள் மீளக்குடியமரவோ, வீடுகளைப் பார்வையிடவோ அனுமதி வழங்கப்படவுமில்லை; எதுவித முன்னேற்ற நடவடிக்கையும் எடுக்கவுமில்லை.

முகமாலை, கிளாலி மக்கள் மீளக்குடியமர்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளோ, அரசசார்பற்ற அமைப்புக்களோ இதுவரை உதவ முன்வரவில்லை. 2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 32 மாதங்களாக தொழிலிழந்து, வீடுகளையிழந்து, உடைமைகளையிழந்து, இனனொருவரின் வீட்டில் அநாதரவாக பல சொல்லொண்ணா இன்னல்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம்.

சொந்த வீட்டிற்குப் போகமுடியாது தவிக்கும் முகமாலை, கிளாலி மக்களுக்கு, அரச, அரசசார்பற்ற அமைப்புகள், நிறுவனங்கள் வழங்கும் பொருள்களை ஏன் எமக்கு வழங்க அதிகாரிகள் பின்னடிக்கிறார்கள்?

இனியாவது எமது மீள்குடியேற்றத்துக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து எமக்கு விடிவை ஏற்படுத்தித் தருமாறு மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

*முகமாலை, கிளாலி.* முகமாலை, கிளாலி **பாதிக்கப்பட்ட மக்கள்.**

## யாழ்ப்பாண மன்னன் பராக்கிரமபாகுவா?

முதலியார் இராசநாயகம் 'Ancient Jaffna' என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதினார். யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் நூல்களில் இவரது நூல் முக்கிய இடத்தை வகிக்கிறது. முதலியார் இராசநாயகம் யாழ்ப்பாண வரலாற்றை விஞ்ஞானபூர்வமாக விஜயனின் காலத்திலிருந்து ஆராய்ந்து எழுதியுள்ளார். அண்மையில் இந்நூல் டில்லியிலுள்ள ஆசிய கல்வி நிறுவன (A.E.S. Asian Education service) வெளியீடாக மறுபிரசுரம் செய்யப்பட்டு வெளிவந்துள்ளது. இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் அட்டைப் படத்தை பராக்கிரமபாகு அலங்கரிக்கிறார்.

பராக்கிரமபாகுவுக்கும் யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் என்ன தொடர்பு என்று எனக்குத் தெரியவில்லை. யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர்கள் இந்நூலை பார்க்காமல் விட்டிருக்கமாட்டார்களென்றே நம்புகிறேன்.

இது விடயமாக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் ஆசிய கல்வி நிறுவனத்துடன் தொடர்புகொண்டு கண்டனம் தெரிவிக்கவேண்டுமென்பதே அடியேனின் அவா!

**- ந.பரமேஸ்வரன்.**

## மீள்குடியமர்வோர் நலன்பேண ஒரு குழு அமைக்கப்படுமா?

இராணுவம் கைப்பற்றி வைத்திருக்கும் வீடுகளை உடனடியாகவிட வேண்டும். மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும். இது ஒரு நல்ல விடயம். இழந்த சொத்துக்களை எமது இனம் பெற ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இத்தேவேளை இராணுவம் போன்று பிறரது வீடுகளை கடந்த காலங்களில் ஆக்கிரமித்து இருப்பவர்களை வெளியேற்றி உரிமையாளர்கள் மீளக்குடியமர உதவுவதற்கு ஓர் அமைப்பை உருவாக்கமுடியுமா? 1995இன் பின் எமது வீடுகளைவிட்டுச் சென்ற நாம், எமது வீடுகளை மீட்டெடுக்க வழிகாட்ட வேண்டிய சூழலே உள்ளது. இதற்கு நீதி வேண்டி எங்கு முறையிடுவது?

*மீளக்குடியமரத் துடிக்கும்*
**சிவனேஸ்வரி சிவஞானசுந்தரம்**

# வழுக்கியாறு புனரமைக்கப்படின் விவசாயத்தில் தன்னிறைவு ஏற்படும்

**வழுக்கியாற்றுப் புனரமைப்புத் திட்டம் குறித்த வேலைத்திட்ட முன்னெடுப்பு அறிக்கை ஒன்று நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக விவரிக்கிறது இந்த ஆக்கம்.**

வழுக்கியாற்றைப் புனரமைப்புச் செய்வதன்மூலம் பயன்படுத்தப்படாமல் இருக்கும் விவசாயக் காணிகளில் நெல் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவும், அவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யவும் முடியும். அத்துடன், யாழ். குடாநாட்டில் தனியார் வருமானம் அதிகரித்து, குடாநாடு வளம் பெறவும் வாய்ப்புகள் ஏற்படும்.

பேராசிரியர் குலரத்தினம், இஸ்ரேலிய நிபுணர்களான அலன் தம்பதிகள் போன்றோரால் வழுக்கியாற்றுப் பிரதேசம் அவ்வப்போது ஆராயப்பட்டு வந்துள்ளது. இருப்பினும், 1748இல் டச்சுக்கார அரசால் மேற்கொள்ளப்பட்ட வழுக்கியாற்று அபிவிருத்தியின் பின் இன்றுவரை பாரிய அளவில் எந்தவித அபிவிருத்தி முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினரின் முயற்சியால், யாழ். மாவட்ட பெரும்பாக உத்தியோகத்தர், நீர்ப்பாசன முகாமையாளர் ஆகியோர் இணைந்து வழுக்கியாற்றை புனரமைப்புச் செய்யவேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டி 13 வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு தற்போது நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

### வழுக்கியாறு

வழுக்கியாறு ஓர் அருவி அல்ல. ஆனால், சேகரித்த நீரைக்கொண்டு சென்ற ஒரு பள்ளப்பகுதியே.

1748ஆம் ஆண்டில் டச்சுத் தேசாதிபதியால் புனரமைப்புச் செய்யப்பட்ட வாய்க்கால் இது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கம்பிக்குளத்தில் ஆரம்பமாகும் இவ்வாய்க்கால் 6 ஊடறுக்கும் குளங்களையும் 8 நீர் வடிந்து நிரப்பும் குளங்களையும் கொண்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இளவாலை, பண்டத்தரிப்பு, சில்லாலை பகுதிக்கு வடக்கு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிக் குளங்களில் 14 நேரடி ஊடறுப்புக் குளங்களைக் கொண்டுள்ளது.

மேலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 46 குளங்களில் 14 நீர் நிரப்பும் குளங்களையும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 7 குளங்களையும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 6 குளங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

இக்குளங்கள், வாய்க்கால்கள் மூலம் செல்லும் நீர் அராலியிலுள்ள கல்லுண்டாய் நீர்த்தாங்கியில் - கல்லுண்டாய் பிறிஜ்ஜில் நீரைச் சேர்த்த பின், மீதியுள்ள நீர் அராலி கடலைச் சென்றடைகிறது.

வருடத்தில் காலபோகத்தில் நான்கு மாதங்களும், சிறுபோகத்தில் இரண்டு மாதங்களும் நீரைப் பெற்று, வடிகாலாக ஓடும் இவ்வாய்க்கால் ஒரு வரண்ட வாய்க்காலாகும்.

காலபோக, சிறுபோக காலங்களில் பெய்யும் 40 அங்குலம் முதல் 50 அங்குலம் வரையான மழை நீரைக்கொண்டு வருடத்தில் சராசரி 22ஆயிரத்து 100 கன அடி நீரைத் தன்னகத்தே தேக்கியும் ஆயிரத்து 200 கனஅடி நீரை வெளியேற்றியும் வருகிறது.

சராசரியாக 200 - 300 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்டது வழுக்கியாற்றுப் பிரதேசம்.

சுமார் 40 - 60 குளங்கள் மூலமும் 25 வாய்க்கால்கள் மூலமும் தரைக்குக்கீழ் நீரை உட்புகுத்தி ஏறத்தாழ 8 அடி முதல் 22 அடி ஆழத்தில் நீரைப் பெறக்கூடிய 12ஆயிரம் கிணறுகள் (குழாய்க்கிணறுகள் உட்பட) உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்கிணறுகள்மூலம் வரண்ட காலமான ஜூன், ஜுலை மாதங்களிலும் நீர் பாய்ச்சி உப உணவுப் பயிர்கள் செய்கை பண்ணப்படுகின்றன. இப்பிரதேச மண்ணின் மேற்படையில் செம்மண் கலந்த நரை மண்ணையும் சுமார் 2 அடி வரையில் களி மண்ணையும் கொண்டுள்ளமையால் உப உணவுச் செய்கைக்கு இது ஒரு பொன்விளையும் பூமியெனக் கூறலாம். அண்மைக்கால யுத்த அனர்த்தங்கள், பாரிய குண்டுத்தாக்கங்கள், மக்கள் இடப்பெயர்வு போன்றவற்றால் வழுக்கியாற்றுப் பிரதேசத்துக்கு பாரிய சேதம் ஏற்படாவிடினும் மறைமுகமாகத் தரைக்குக் கீழ் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

### வழுக்கியாற்றுப் பிரதேச பாதிப்புகள்

வழுக்கியாற்றுப்பிரதேசம் இன்றைய நிலையில் பல பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இப்பிரதேச பகுதியில் காணப்படும் கிணறுகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமை, பராமரிப்பு அற்ற உவர்த் தடுப்பு அணைகள் இருப்பதால் உவர் நீர் உட்புகும் வாய்ப்பு, கல்லுண்டாய் உப்பளம் சீராகப் பேணப்படாமையால் தரைக்குக்கீழுள்ள நீர் உப்பாகும் தன்மை, யுத்தம் காரணமாக வழுக்கியாற்று அணைகள், நீர்த்தேக்க அணைகள் என்பன சேதமடைந்துள்ளமை. இதன்காரணமாக நீர்த்தேக்கம், வாய்க்கால்களில் கழிவுகள் நிரப்பப்படல் போன்ற பல பாதிப்புகளுக்கு, இந்த வழுக்கியாற்றுப் பிரதேசம் உள்ளாகியிருக்கின்றது.



### அபிவிருத்தியின் அவசியம்

வழுக்கியாற்றுப் பிரதேசம் விரைவாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும். இப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவேண்டியதன் அவசிய நிலைகள் வருமாறு:

* வட்டுக்கோட்டை, அராலி, நவாலி போன்ற இடங்களிலுள்ள கிணறுகளில் பாதிக்கு மேற்பட்டவை வரண்ட காலத்தில் நீர் உவர்த்தன்மையை அடைகின்றன. இவற்றைத் தொடரவிடாது வழுக்கியாறு புனரமைப்புச் செய்யப்படவேண்டும்.

* சங்கரத்தைப் பகுதியில் நன்னீர் - குடிநீர் விநியோகம் பாதிப்படையாதிருக்க.

* சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப உணவு உற்பத்தியை மேற்கொள்ள - வழுக்கியாற்றுப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படுவது அவசியம்.

**வி.பி.சர்மா**
**(வலி.தெற்கு செய்தியாளர்)**

'நிகொட்' (NECORD), 'நியாப்' (NEYAP), 'றான்' (REAN) போன்ற நிறுவனங்களின் நிதிமூலத்தைக் கொண்டு பாரியளவில் வழுக்கியாறு அபிவிருத்தி செய்யப்படாலே பூரண பயனைப் பெறமுடியும்.

### புனரமைக்கப்படவேண்டிய பணிகள்

* மூடப்பட்டுள்ள கட்டுவன் கம்பிக்குளம் புனரமைப்பு.

* தெல்லிப்பழை ஆஸ்பத்திரி முன்றில் வாய்க்கால், வீமன்காமம் வாய்க்கால் என்பவற்றிலுள்ள கழிவுகள் அகற்றப்படல்; தூர் எடுத்துப் புதிதாக கட்டுகள் அமைத்தல்.

* தொடர் குளங்களான அளகொல்லைக் குளம், அம்பனைக் குளம், வெறுத்தலைவிளான்குளம், கிழுவனைக்குளம் என்பவைகளின் அணைகள் புனரமைத்தல், தூர் எடுத்தல்.

* நீரை வீழ்த்தி எழுப்பும் 'சைபோன் முறைமை' மூலம் நீர் பாயும் மட்டத்தைப் பேணுவதற்காக 'அராலி பறாஜை' திருத்தி, பனாக்கைக் குளம் முதல் ஐந்து கண் மதகு வரை 'சைபோன்' முறையை அமைத்தல்.

* வழுக்கியாற்றுப் படுக்கைக் காணி சொந்தக்காரர்கள் அனைவரும் நீர்தேங்கக்கூடியவாறு வரம்புகளை அமைத்தல்.

வயல் சொந்தக்காரர்களால் அகழ்ந்து அழிக்கப்பட்ட வாய்க்கால் கட்டுக்களை பேண 6 அடி அகல நீள நிலத்தைப் மீளப்பெற்று வாய்க்காலைப் புனரமைத்தல்

கிணறுகளுள் உட்புகுந்த உவர் நீரை வெளியேற்றி தரைக்கீழ் நீர் மூலம் குடிதண்ணீரைப்பெறல்.

ஆற்றுப்படுகை ஓரங்களில் மர நடுகைகளை மேற்கொண்டு நிலக்கீழ் காற்றுமூலம் உவர்படிவதைத் தடுத்தல்.

இப்புனரமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம் பின்வரும் நன்மைகள் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

* சிறுபோக உப உணவு பயிர்ச் செய்கையில் செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்டுள்ள ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் உப உணவு பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம்.

1000 முதல் 2000 வரையான ஹெக்டேயர் மேட்டுநிலத்துக்கு இலகுவான ஏற்றுப்பாசனம் கிடைக்கும்.

* கிணற்று நீர்மட்டம் அதிகரிப்பால் நீண்டநேரத்துக்கு நீர்ப்பாசனம் செய்யலாம்.

* புதிய குடிதண்ணீர்ப் பாவனைக்கான நீர்த்திட்டம் செயற்படுத்த வேண்டிய நிலை தடுக்கப்படும்.

* கரையோரப் பகுதிவாழ் மக்கள் குடிதண்ணீருக்காக குழாய்க்கிணறுகள், நன்னீர் கிணறுகளைத் தேடி அலையும் நிலை குறைவடையும்.

**செய்திக் கட்டுரை**

* வளவுகளில் நீர்தேங்குவதன் மூலம் வான் பயிர்களான தென்னை, பனை மற்றும் பழமர வகைகள் செழித்து வளரும்.

* கரையோர நன்னீர் மீன்வளர்த்தலுக்கு வாய்ப்பு ஏற்படும்.

* கரையோர மர நடுகை திட்டத்தின் மூலம் விறகுத் தேவை குறையும்.

* கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரை அதிகரித்து கால்நடை, பாலுற்பத்தி விருத்தியடையும்.

* மரநடுகையால் கடல் அரிப்பு தடுக்கப்படும்.

* 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்களுக்கு மேலதிக வருவாய் பெற வாய்ப்பு ஏற்படுவதுடன் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் உப உணவுப் பயிர் உற்பத்திமூலம் வருமானம் பெற முடியும்.

* யாழ்.குடாநாட்டில் தற்போது இரண்டு மாதங்களுக்குப் போதுமானதாக இருக்கும் தானிய உற்பத்திகளை மூன்று மாதங்களுக்கு போதுமானவையாக அதிகரிக்கலாம்.

* தனிநபர் வருமானம் அதிகரிக்கும்.

* வறுமை வேலையின்மை விருத்தியடையும். குடும்பச் செலவும் குறைவடையும்.

இவ்வாறான பல நன்மைகள் தரவல்ல வழுக்கியாற்றுப் புனரமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த கோடிக்கணக்கான பணம் தேவைப்படலாம். புனரமைப்புப் பணிகளை கட்டம் கட்டமாக நிறைவேற்றினால் பூரண வெற்றி கிடைக்கும் என்பது நம்பிக்கை.

# நாட்டில் நலமும் வளமும் பல்கிப் பெருக பனைவளத்தைப் பேணி வளர்ப்போம்!

## கமழும் புலமும்

நாட்டின் நலமும் வளமும் பெருகப் பனையை வளர்ப்பதே நமது கடமை. பனைத்தொழில் குறைந்த முலதனம், நிறைந்த பலன் கொண்டது. கட்டாந்தரையிலும் செழிப்புடன் வளரும் இயற்கை அன்னை அளித்த ஈடற்ற செல்வம் பனை.

### பனை நடுகை

நன்கு கனிந்த பனம் பழத்தின் விதைகளை இரண்டடி நீளம், இரண்டடி அகலம், ஓரடி ஆழம் உள்ள குழிகளில் நடுதல் நல்லதென்பர். பனைக்குப் பத்தடி என்னும் பழமொழிக்கமையப் பனம் விதைகளைப் பத்தடி தூரத்துக்கொன்றாக நடலாம்.

பனை தானாகவே முளைத்துப் பயன்தரும் மரமாயினும், நாம் திட்டமிட்டு அதனை நட முற்படும்போது நல்ல விதைகளையே நடுதல் நன்று. வண்டுகள், பூச்சிகள் அரிக்காது நன்கு பழுத்த பனம் பழத்தின் திரண்ட விதைகளை தெரிந்து, நீரில் ஊறவிட்டு எடுத்துக் கொள்ளலாம். கட்டைப்பனையின் விதைகளாயின் நன்றென்பர். அவற்றைக் கறையான், பூச்சி, புழுக்கள் அரிக்காமல் காத்து அப்பாறையில்லாத இடத்தில் நடுதல் நன்மை தரும். நடும்போது குழிகளில் உரமும் மண்ணும் கலந்துவிடல் நல்லதென்பர். பனம் விதைகளை நட்ட சில நாள்களுக்கு வெயில் படாதவாறு குழிகளின் மேல் ஏதாவது குழைக் கொப்பு இட்டு மறைத்தலும் நல்லதாகும்.

பனைக்குச் செம்மண், களிமண், கடற்கரைநிலம், வரண்டநிலம், மேட்டு நிலம், தாழ்ந்தநிலம் என்ற பேதமில்லை. எங்கும் எல்லா நிலத்திலும் பயன்தரும். ஓர் ஏக்கரில் 500 பனைகளை வளர்க்கலாம்.

பனையை வளர்ப்பதற்குப் பெரிய நிலமும் தேவையில்லை. ஒரு ஏக்கர் நிலத்தில் விளையும் கரும்பு தருகின்ற பயனை விடவொரு ஏக்கர் நிலத்தில் உண்டாகக் கூடிய பனைகள் தரும் என்று கணக்கிட்டுள்ளனர். எனவே, கரும்பிலும் பார்க்கப் பனை அதிக ஆதாயந்தருவதோடு தரமான சீனியையும் வேறு மூலப்பொருள் களையும் தருகிறது.

### ஆண்பனையும் பெண்பனையும்

பனைமரம் வளர்ந்து பாளையீனும் வரை அது ஆண்பனையோ அன்றிப் பெண்பனையோ என அறிந்து கொள்ளுதல் சிரமம். ஆனால் ஒற்றைக் கொட்டைப் பழத்தின் விதை ஆண் பனையைத் தரும் என்றும், இரட்டைக் கொட்டைப்பழ விதைகளில ஒன்றிலிருந்து ஆண்பனையும் மற்றதிலிருந்து பெண்பனையும் உண்டாகும் என்றும், முக்காலிப் பழத்தின் விதைகளில் ஒன்று பெண் பனையையும், மற்றிரண்டும் ஆண் பனையையும் தரும் என்றும் கூறுவர். எனவே பனை அபிவிருத்தி செய்வோர் இரண்டடைக்கொட்டைப்பழ விதைகளை நடுதல் நன்று என்பர். பெண் பனைகள் கருக்கொண்டு பாளை ஈனுவதற்கு ஆண் பனைகள் அயலில் வேண்டும் என்பது இயற்கை நியதியாகும்.

பனையின் பருவத்தைப் பெண்ணின் வளர்ச்சிப் பருவத்தோடு ஒப்பிட்டுக் கூறுபவர், பனையும் பெண்ணும் பன்னிரண்டாண்டிற் பயன் என்பர். பனம் விதையில் முளை தோன்றுவதும், அது முளைத்து முறி கிழங்காவதும், அது நாளடைவில் நார்க் கிழங்காவதும், அந்நிலை கடந்து பீலிப்பருவம் அடைவதும், ஈற்றில் வடலியாகி வளர்ந்து வளர்ந்து முதிர்ந்து பனையாவதும் பல பருவ வளர்ச்சிப் படிமுறையாகும்.

வடலி என்பது ஆண்பனைக்கும், பெண்பனைக்கும் பொதுப் பெயராகும். அவை வடலிப்பருவம் கடந்து பனைப் பருவம் அடையும்போது ஆண் பனையின் மட்டைகள் பெண் பனையின் மட்டைகளைப் பார்க்கப் பருமனாகவும் திரட்சியுள்ளனவாகவும் இருக்கும். ஆண்பனையும் ஓரளவு பருத்து நிற்கும். ஆண்பனையை அலகு என்றும், பெண் பனையைப் பருவம் என்றும் வழங்குவர்.

பனம் விதை முளைத்துக் கிழங்காகிப் பீலிவிட்டு வளர்ந்து வடலியாவதைப் பின்வரும் காலவரையறை நோக்கிப் பெயரிட்டு வழங்குவர்.

விதைப்பருவம்-விதையிலிருந்து 22 நாள்வரை.

முறிகிழங்கு - 22 நாளிலிருந்து 3 மாதம்வரை.

நார்க்கிழங்கு - 3 மாதம் முதல் 4 மாதம்வரை.

பீலிப்பருவம் - 4 மாதம் முதல் 2 வருடம்வரை.

வடலிப்பருவம் - 2 வருடம் முதல் 10 வருடம்வரை.

வடலியின் முதற் குருத்து பீலி. அது தனக்கு வேண்டிய உணவுப் பாதுகாப்பாக கிழங்கோடு உதயமாகின்றது. கிழங்குப்பருவம் கடந்து பீலி வெளியே சூரிய வெளிச்சத்தை நோக்கி வந்து விரியும் தன்மையை "வைத்த விதை பாவாய் முளை கிழம்பிப் பாம்பாடிடும் பருவம்" என்று தால விலாசம் பாடுகிறது. "இதை மூடு படம் விரித்தாடு பாம்பைப் போல முளைத்துவரும் பருவம்" என்று கும்மிப் பாடல் கூறுகின்றது.

### பனையின் வளர்ச்சி

பனை 10வருடம் முதல் 25வருடம் வரை நன்றாக வளருகிறது. ஆண்டு தோறும் மூன்று அங்குல வளர்ச்சிக்குக் குறையாமல் இப்பருவத்தில் வளரும் என்பர். அதன் மேல்25 ஆண்டு முதல் 45ஆண்டு வரை அதன் வளர்ச்சிவேகம் குறைவு. இக்காலத்தில் ஆண்டுக்கு ஓரங்குல வளர்ச்சி உண்டாகின்றது. பின்னர் 45வயதுமுதல் 60 வயதுவரை வளர்ச்சி வேகம் குறைந்து வைரம் உண்டாக ஆரம்பிக்கிறது.

### பனையின் வைர வளர்ச்சி

இங்ஙனமாகப் பனை நூறு வயதுப் பருவத்தில் வைரம் நிரம்பியதாய் நிற்கும். அதன் ஓலைகள் பசுமை குறைவாயிருப்பதன் காரணம், அதன் சிராம்பு முற்றி வைரம் பரவத் தொடங்கும்போது நீர்ச்சத்தினை மேலே செலுத்தமுடியாமை ஆகும்.

### பனையின் வைரம்

புறவைரமுள்ள மரங்களில் பனையே உறுதியானது. அது அதிக பாரத்தைத் தாங்கக் கூடியது. அதன் வைரம் ஆறங்குலம் வரை பரவி இருக்கும். வைரம் பாய்ந்த பனையின உட்சோத்தி மிகவும் குறைவு. வைரமுள்ள பனையின் ஒரு கன அடி 50 இறாத்தல் நிறை இருக்கும்.

வடலிப் பருவத்திலேயே பனையின் வளமும் வள்ளல் தன்மையும் ஆரம்பிக்கின்றன. முதலில் நிலவடலி எனப் பெயர் பெறும் பருவத்திலேயே மயிலின் தோகை போன்ற ஓலைகள் உபயோகமாகின்றன. அழகான விசிறிகள் செய்து வருவாயீட்டுவோர் பலர். அடுத்துவரும் கருக்கு வடலிப்பருவத்தில் நீளமான கருக்கு மட்டைகள் கிடைக்கின்றன. ஓலைகள் கால்நடைகளுக்கு உபயோகமாகின்றன. வடலியின் மூன்றாம் பருவமே கங்குவடலிப் பருவம். பனையின தலைசிறந்த மூலவளத்தில் கங்குமட்டைத் தும்பு முக்கியமானது. தும்புகளில் கருந்தும்பு முதலிடம் பெறுவது. முக்கியமான கருந்தும்பு தரும் கங்கு வடலிகள் நாட்டின் பொருளாதார வளத்திற்கு முக்கியமானவை. இப்பருவத்தில்10 வயதளவில வடலி ஆறடி உயரம் வளர்ந்து பனைப் பருவத்தை அவாவி அழகாக நிற்கும்.

பன்னிரண்டாண்டிற் பருவமடையும் பெண் போலப் பனையும் பன்னிரண்டாண்டுக் காலத்தில் பசுமையடைந்து பார்ப்பதற்கு அழகாய் நிற்கும். அப்போது அதன் கொண்டையில் உள்ள மட்டைகள் நெகிழ்ச்சி அடையும். அதேவேளையில் அயலில் உள்ள ஆண் மரத்தின் விரல் போன்று திரண்ட பாளைகளிலிருந்து மகரந்தப் பொடி மணங்கமழக் காற்றோடு சென்று பெண் பனையின் குருத்தடியிற் சேர்கிறது. மணங்கமழ் மகரந்தங் கொண்ட பெண்பனை, குரும்பையீனுகிறது. பனை பருவமடைகிறது. பயன் தருகிறது.

### வகைகள்

பனையாவும் ஒரேவிதமாகக் காணப்பட்டாலும், அவற்றின் கனிகளின் திரட்சி, நிறம், சுவை முதலிய தன்மைகளைக் கொண்டு அவற்றைக் கருப்பி, கருங்குந்தி, செங்குந்தி, நெடுமி, கட்டைச்சி, பூமணத்தி முதலிய பெயர்களால் பெரியோர்கள் குறிப்பிடுவர். மீசாலை, பேசாலை முதலிய இடங்களிலும், கீரிமலை, தீவுப்பகுதி முதலிய இடங்களிலும் வெவ்வேறு சுவையுடைய பழங்களைக் காணலாம். சுவை மாத்திரமன்றி அவற்றின் கனியினடர்த்தி, தும்பினடர்த்தி முதலியனவும் வெவ்வேறானவையாகும். சில நீண்ட குலைகளையீனும் சில அடர்த்தியான குரும்பையுள்ள குலைகளையீனும்.

பனையைப் பயிரிட்டு வளர்ப்பதற்குப் பல தொழிலாளர் தேவையில்லை. பனம்விதை முளை கொண்டு வளர்ந்து வருங்காலத்தில் அதனை ஆடு, மாடுகள் தின்னாமற் காத்துவிட்டால் போதுமானது. அது இயற்கையின் கருணையாலேயே வளர்ந்து நின்று என்றும் பயன்தரும்.

"முப்பாசந் தீர்த்த முனிவர் மொழி வாய்மை போல் எப்போதும் நின்று பயனீயுமே" என்று சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார். அது கருக்குவாள் கொண்டு உலகைக் காக்கும்.

### அணுகும் நோய்கள்

பனையில் வட்டு அவிதல் போன்ற நோய்கள் தாக்குதலும் கொடிய வண்டுகள், புழுக்கள், பூச்சிகள் அரித்துத் தாக்குதலும் உண்டு. புழுக்கள் குடிகொண்டிருக்கும்போது கிருமி நாசினிகளைத் தெளித்துப் பனையைப் பாதுகாத்தல் நல்லது.

பனைக்கு நீர்பாசனம் தேவையில்லை என்றாலும் சிலவேளைகளில் நீர்ப்பாசனம் நல்ல பயனைத்தரும். வரண்ட காலங்களில் வடலிகளுக்குப் போதிய நீர்வசதியிலாமை காரணமாக அவை வட்டுச் சரிந்து பட்டுப்போகின்றன. அக்காலத்தை அறிந்து ஓரளவு நீர் பாய்ச்சினாலும் பனைக்குப் புத்துயிர் அளித்துவிடும். வடலிகளைச் சுற்றிப் பாத்தி கட்டுதலும் பனங்காணியைச் சுற்றி வரம்புகட்டி மழை நீரைத் தேக்கி விடுதலும் பனைகளுக்கும் வடலிகளுக்கும் பெரிய வாய்ப்பாகும்.

பனைகள் ஐதாக நின்று அதனால வெயில்படும் நிலமுள்ள தோட்டங்களில பயறு, துவரை, உளுந்து முதலிய சிறு தானியங்களைப் பருவகாலத்தில விதைத்துப் பயன்பெறலாம். இவற்றின் அறுவடைக்குப் பின் எஞ்சிய கழிவுகளைப் பனையடியில் வெட்டிப் புதைத்தல் பசளையிடுவதாகும். பனை பசுமையுற்று வளர்ந்து நல்ல பயனைத் தருவதற்கு இது ஏதுவாகின்றது.

### எமது உயிர்

பனையின் பொருளாதாரப் பயனைக்கருதி, அதனை எங்கள் வரண்ட பிரதேசங்களில் உண்டாக்குதல் வேண்டும். தேடுவாரற்றுக் கிடக்கும் நிலங்களையும், வேறு பயிரினங்களுக்கு உதவாத நிலங்களையும் பனம் தோப்புகளாக்குவோம். இன்னும் வீதியோரங்கள், வயற்கரைகள், குளக்கரைகள், வளவுஎல்லைகள் முதலிய இடங்களிலும் வசதிபோலப் பனையை வரிசை வரிசையாக உண்டாக்குவோம். இங்ஙனம் வரண்ட பிரதேசத்திலே வளம் பெருக்குதல் நீருக்கு அடுத்த படியான உயிர்நிலை என்று கருதப்படுகிறது. ★

**வாசகர்களுக்கு!**

குடாநாட்டு விவசாயச் செய்கை தொடர்பான தரமான ஆக்கங்கள் விவசாயிகளிடமிருந்தும் துறை சார்ந்த நிபுணர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றன.

குடாநாட்டு விவசாயிகளின் பிரச்சினைகள், பயிர்ச்செய்கை பாதுகாப்பு, பயிர்ச்செய்கையில் நவீன தொழில்நுட்பமுறைப் பிரயோகம், புவியியல் மாற்றங்கள் சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கியதாக கட்டுரைகள் அமைய வேண்டும்.

தரமான ஆக்கங்கள் 'கமழும் புலமும்' பகுதியில் வாராந்தம் பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)

# குருநகர் மீன்வாடி புதன் முதல் மீண்டும் பழைய இடத்தில்

குருநகர், பெப்.4

குருநகர் மீன்வாடி நாளை புதன்கிழமை தொடக்கம் மீண்டும் குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்குப் பின்புறமாக அமைந்துள்ள கடற்கரைக்கு அருகில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக யுத்தம் காரணமாக மேற்படி மீன் வாடி பொதுமக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருந்தது. குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கைக்கிணங்கி படையினர் மீன்வாடியைப் பாவிப்பதற்கான அனுமதியை அண்மையில் வழங்கியிருந்தனர்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்களுடன் அண்மையில் இப்பகுதிக்குச் சென்று, குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ள படையினரின காவலரணை மேற்குப் புறமாக நகர்த்தச் செய்து மீன்வாடிக்குச் செல்வதற்கான பாதையை ஏற்படுத்திக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச்சங்க வளவில் குருநகர் மீன்வாடி தற்போது இயங்கி வருகிறது. குருநகர் கடற்கரையிலிருந்து சுமார் 200மீற்றர் தூரத்தில் இம்மீன்வாடி அமைந்துள்ளதனால், மீனவர்கள் இதுவரை காலமும் மிகுந்த சிரமத்தை அனுபவித்து வந்தனர்.

நாளை 5ஆம் திகதி திறக்கப்படவுள்ள சீநோர் மீன்வாடி கடலுக்கு மிக அண்மையில் உள்ளது. மீனவர்கள் இதுவரை அனுபவித்து வந்த துன்பங்களுக்கு இது விடிவாக அமையும் என குருநகர் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (எ-51)


# ஒலிபெருக்கி அச்சுறுத்தல் இன்னும் ஓய்ந்தபாடில்லை!

மானிப்பாய்வாசி ஒருவர் தம் ஊரில் ஒலிபெருக்கிகள் அடங்கின எனவும் வானொலிப் பெட்டிகளே கரைச்சல் கொடுக்கின்றன எனவும் எழுதியிருந்தார்(உதயன் 11.01.2003).

நம் ஊர் சுன்னாகம் இருக்கிறதே! யார்தான், என்னதான், எப்படிதான் சொன்னாலும் இந்த ஒலி பெருக்கிகளையே உடும்புப்பிடியாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஊரையே அதிர வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மானசீகமாக வணங்கி அருள் பெற வேண்டிய கடவுள் என்ற சக்தியை ஒலி பெருக்கியால் அருள்பெறப் பார்க்கிறார்கள். கூடக் கூடச் சத்தம் வைத்தால் தூர இருக்கும் கைலாசத்துக்குக் கேட்கும் என்று நினைக்கிறார்கள் போலும்.

தீபாவளி, திருவெம்பாவை, சிவராத்திரி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு என்று வந்துவிட்டால் போதும். படுக்கப்போகும்போதே பயத்துடனேயே போவோம். நள்ளிரவில் ஒலிபெருக்கி என்ற அரக்கன் பயங்கர அலறல் அலறி நம்மை சித்திரவதை செய்யப போகிறானே என்று கலங்குவோம். பயந்தபடி நள்ளிரவில் ஒலிபெருக்கி அரக்கன் அலறத் தொடங்குவான். ஒவ்வொன்றாக ஏட்டாபோட்டியாக, எட்டுத் திக்கிலிருந்தும் பயங்கர அலறல் கேட்கும். ஊரே அதிரும். பதறிக்கொண்டே கண் விழிப்போம்.

எனது வீட்டில் வயது போனவர் ஒருவர் இருக்கிறார். நள்ளிரவு நிசப்தத்தில் ஒலிபெருக்கி அரக்கன் சடுதியாக அலற, அவர் பதறிக்கொண்டே கத்துவார். "ஓடுங்கோ! ஓடுங்கோ!! பங்கருக்கு ஓடுங்கோ! ஷெல் அடிக்கிறான்கள்."




அவருக்குப் பழைய ஞாபகம். அவரைக் கட்டிப்பிடித்து ஆற்றுவதற்குப் பெரும் பிரயத்தனம் படுவோம். யுத்த அரக்கனிடம் தப்பி ஒலி பெருக்கி அரக்கனிடம் அகப்பட்டு விட்டோம் என்றிருக்கும். புனிதமான நாள்கள் சித்திரவதை நாள்களாக மாறும்.

நம் மாணவர்களின் கதி என்ன? மாணவர்கள் வீட்டில் படிக்கும் நேரத்தில் இந்த ஒலிபெருக்கி அரக்கன் அவர்களைப் படிக்கவிடாமல் குழப்பு

**குலம்**

கிறான். பரீட்சைக் காலங்களில்கூட அவர்களால் படிக்கமுடியாது. அவர்களின் எதிர்காலமே பாழ். அரக்கனுக்கு என்ன தெரியும் கல்வி, கேள்விகளைப் பற்றி?

இந்த ஒலிபெருக்கி அரக்கனை எம்மீது ஏவிவிடுபவர்களைப் பற்றி என்ன சொல்ல? சிந்திக்க முடியாத, கல்வியறிவு இல்லாத, உலக அறிவு இல்லாத, சமய அறிவு இல்லாத அறிவிலிகள் என்பதா? அரைப் பைத்தியங்கள் என்பதா? முழுப் பைத்தியங்கள் என்பதா? மந்திரத்தால் மாங்காய் விழ வைக்கும் மந்திரவாதிகள் என்பதா? பஞ்சமாபாதகங்களையும் செய்து விட்டுத் தம்மை புனிதர்களாகக் காட்டும் உருத்திராட்சப் பூனைகள் என்பதா? என்னவென்று சொல்ல?

குடிசனங்களை இம்சைப்படுத்துவதைத் தடுப்பதற்கு சட்டதிட்டங்கள் இருக்கின்றனவே! இந்த நேரங்களில இந்த அளவு சத்தங்களுக்கு மேல் போகக்கூடாது, இந்த நேரங்களில் சத்தமே வைக்கக்கூடாது என்று சட்டங்கள் இருக்கின்றனவே! அவை ஏன் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை? மக்களை இம்சைப்படுத்தி அநீதியை விளைவிக்கும் இந்த ஒலிபெருக்கி அரக்கனை சட்டக் காவலர்களாலும் நீதி பரிபாலனத்தினாலும் அடக்க முடியாதா? ★


நேற்றைய சிறுவர்களை
இன்று நாம் கௌரவிப்போம்
சுதந்திரம் பெற்று இன்றுடன் 55 ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளது. அன்று ஐந்து வயதாக இருந்த சிறுவர்கள் இன்று அறுபது வயதை அடைந்த மூத்த பிரஜைகளாக உள்ளனர். எம் தாய் நாடு அன்று அடைந்த சுதந்திரம் என்றும் நிலைத்திருப்பதற்காக வாழ்க்கை முழுவதும் உடலாலும் மனதாலும் வியர்வை சிந்தி உழைத்த எம் மூத்த பிரஜைகளை நாம் என்றும் மறக்க முடியாது. இவர்கள் தமது வயோதிப காலத்தை சுதந்திரமாக வாழ்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தேசிய சேமிப்பு வங்கி மேற்கொண்டு உள்ளதை, சுதந்திர தினமான இன்று எம் நாட்டு மக்கள் அனைவருக்கும் அறியத் தருவதையிட்டு நாம் பெரு மகிழ்வடைகின்றோம்.
NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

# 3ஆவது உலக...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பறக்க வைத்துக்கொண்டிருந்தார் கபில்.

இறுதியில் 138 பந்துகளை சந்தித்து 16பௌண்டரிகள், 6சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களைக் குவித்தார் கபில்தேவ். இந்தியா 60ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 266 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு களமிறங்கிய சிம்பாப்வே அணி 57 ஓவர்களுக்குள் 235 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோற்றது.

இந்தப் போட்டித் தொடரில் இலங்கையும் தனது முதலாவது வெற்றியைப் பெற்றது. நியூஸிலாந்து அணியுடனான அந்த ஆட்டத்தில் இலங்கை சிறப்பாக ஆடி 181 ஓட்டங்களுக்குள் நியூஸிலாந்து அணியை ஆட்டமிழக்கச் செய்தது. பின்னர் இலகுவாக வெற்றிபெற்றது. இது தவிர பாகிஸ்தானுடன் நடந்த மற்றொரு ஆட்டத்தில் இலங்கை போராடித் தோற்றது. இந்த ஆட்டம் அப்போது ஒரே நாளில 120 ஓவர்களில் 626 ஓட்டங்கள் பெறப்பட்டமை சாதனையானது. பாகிஸ்தான் 339 ஓட்டங்களையும் இலங்கை 288 ஓட்டங்களையும் பெற்றன.

தொடரின் இறுதிஆட்டம் ஜுன் 25ஆம் திகதி லோட்ஸில் ஆரம்பமானது. முதலிரு உலகக் கிண்ணங்களும் ஏற்படுத்திய பரபரப்பால் இந்த உலகக் கிண்ணப் போட்டிக்கு மேலும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

அதிகம் எதிர்பார்க்கப்படாத இந்தியாவும் இருமுறை கிண்ணத்தைக் கைப்பற்றிய மே.இந்தியத் தீவுகள் அணியும் மோதின. அதனால் மே.இந்திய அணியே வெல்லும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருந்தது. ஆனால், அவற்றைத் தகர்த்தெறிந்து கிண்ணத்தை வென்றது இந்தியா.

நாணயச் சுழற்சியில் வென்ற மே.இந்திய அணித் தலைவர் கிளைவ் லொயிட் இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார். மே.இந்திய அணியில் அன்ரி ரொபேர்ட்ஸ், ஜோயல் கானர், மல்கம் மார்ஷல், மைக்கேல் ஹோல்டிங் என்று முன்னணி வேகப் பந்துவீச்சாளர்கள். எதிர்த்தாடிய இந்திய ஆரம்ப ஆட்டக்காரர் சுனில் கவாஸ்கர் 2 ஓட்டங்களுடன் சுருண்டார். ஆனால், தமிழ்நாட்டுக்காரரான கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் துணிச்சலாக மே.இந்திய பந்துவீச்சாளர்களை எதிர்த்தாடினார். 57 பந்துகளில் அவர் 7பௌண்டரிகளுடனும் ஒரு சிக்ஸருடனும் 38 ஓட்டங்களைப் பெற்றார். பின்வந்த இந்திய துடுப்பாளர்களுக்கு இது ஊக்கத்தையும் தெம்பையும் தந்தது. இறுதியில் 54.4 ஓவர்களில் தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது இந்தியா.

மே.இந்தியா போன்ற கிரிக்கெட் ஜாம்பவான்களுக்கு இது ஒன்றும் பெரிய எண்ணிக்கை இல்லையே? அதனால் வெற்றி அந்த அணிக்கே என்று கூறப்பட்டது. ஆனால், தாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்தார்கள் இந்தியர்கள். கபில்தேவ், சாந்து, மதன்லால், பின்னி ஆகிய இந்தியப் பந்துவீச்சாளர்களின் நேர்த்தியான பந்துவீச்சினால் மே.இந்திய அணி தனது முக்கியமான முன்வரிசை ஆட்டக்காரர்கள் ஐவரை 66 ஓட்டங்களுக்குள்ளேயே இழந்தது. மதன்லால வீசிய பந்தை தூக்கியடிக்க முயன்றார் அதிரடி ஆட்டக்காரரான விவியன் ரிச்சர்ட்ஸன். ஆனால், அதனை ஓடி வந்து அழகாகப் பிடித்தார் கபில தேவ். அவ்வளவே மே.இந்திய அணியின் ஏனைய விக்கெட்டுக்கள் தொடர்சசியாகச் சரியத் தொடங்கின. 140 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அது தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. கடைசி 3விக்கெட்டுக்களையும் அமர்நாத் வீழ்த்தினார். 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மே. இந்திய அணி இந்தியாவிடம் தோற்றது.

3விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்த மொஹிந்தர் அமர்நாத் ஆட்டநாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

*(வளரும்)*

- கனிமொழி


## வாழ்த்துகின்றோம்



வடபிரதேச இந்துப்பேரவை யாழ். கிளைத் தலைவர்
இலங்கை முதல் உதவிச்சங்கம் - யாழ். கிளை உப செயலாளர்
தீவக அரிமாக்கழகம் - அங்கத்துவப் பணிப்பாளர்
பிரு கல்யாணி ஜுவல்லர்ஸ் உரிமையாளருமான

**திரு. சுப்பிரமணியம் நித்தியானந்தன்**

அவர்களது பிறந்த நாளான இன்றையதினம் அவர்தம் சேவை எம் சமுகத்திற்கும் மென்மேலும் கிடைக்கவும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழவும் இறைவன் அருள்பாலிப்பாராக. நாங்களும் வாழ்த்துகின்றோம்.

வடபிரதேச இந்துப்பேரவை - யாழ்.மாவட்டம்,
இலங்கை முதல் உதவிச் சங்கம் - யாழ்.மாவட்டம்,
தீவக அரிமாக்கழகம்.

(14074)



## பிழை திருத்தம்

எமது ஸ்தாபனத்தால் கடந்த 2.2.2003 மற்றும் 3.2.2003 ஆகிய தினங்களில் உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட

**CANADA - STUDY, WORK & MIGRATE**

**கனடா - கல்வி, வேலைவாய்ப்பு, குடியுரிமை**

*என்ற விளம்பரம் தொடர்பாக*

கனடாவில் கல்வி கற்பதற்கான வழிமுறைகள் பற்றி மட்டும் கனடாவில் இருந்து வருகை தந்துள்ள PRONTO DATA கல்லூரியின் தலைவரும், கொழும்பு IEMC Global (Pvt.) Ltd. இன் தலைவரும் இன்று (04.02.2003) காலை 11 மணி முதல் மாலை 6 மணிவரை **HOTEL GREEN INN,** NO.60 Kandy Road, Jaffna என்ற இடத்தில் உங்களைச் சந்தித்து விளக்கம் அளிப்பார்கள் என்று திருத்தி வாசிக்குமாறு வாசகர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

★ நேர்முகத் தேர்வின்போது நேரடி அனுமதி வழங்கப்படும். அனுமதிக் கட்டணம் கனேடியன் டொலர் 400 மட்டுமே. விசா உத்தரவாதம் (Conditions apply)

தொடர்புகளுக்கு:

★ Anusha - 0777-711444
★ Praba - 0777-798149
★ Renuk - 0777-743370

மேலதிக தகவல்களுக்கு:


**IEMC Global Group (Pvt.) Ltd.**
**In Colloboration with Canadian College of Applied Arts & Technology (Pvt.) Ltd.**
No.07, Easwari Road, Colombo - 06
T.P:- 366780, 559766, 559767,
Fax:- 074-513161
Email - iemcsp@sltnet.com

(சி-26345)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 - 06 - 1931



மறைவு
27 - 01 - 2001

**அமரர் பழனிமலை**

*திதி : 04.02.2003*

தவில் யுத்தக்களம் அமைக்குந்
தலக்கிடிகொடி நாட்டிய தவில் மேதை
பழனிமலையை மாமலையே முட்டிவந்து
மோதினாலும் பழனிமலை என்றும் சாய்ந்ததுண்டோ?

*கைதடி கிழக்கு,*
*கைதடி.*

(14076)

பஞ்சமூர்த்தி
(மகன்)


## களம் காண்கிறது...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணி இழந்தது.

இம்முறை தனது சொந்த மண்ணில் விளையாடவுள்ள தென்னாபிரிக்க அணி உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களான ஜக் கலிஸ், லான்ஸ் குளூஸ்னர், ஹிப்ஸ், ஜொன்டி றோட்ஸ், மார்க் பௌச்சர் மற்றும் பேத்தா டிப்பன்னர் போன்ற அதிரடி ஆட்டக்காரர்களையும் -

அலன் டொனால்ட், நிக்கிபோயே, அன்ரு ஹோல், ஷேன் பொலொக் மற்றும் மக்காயா நிதினி போன்ற தலைசிறந்த பந்துவீச்சாளர்களையும் கொண்டு களமிறங்குகின்றது.

இவை அனைத்துக்கும் மேலாக உலகில் உள்ள அணிகள் எல்லாவற்றையும்விட ஒழுக்கத்துக்கு பெயர் பெற்றதோடு மட்டுமல்லாது தமக்காக மட்டும் விளையாடாது நாட்டின் நலனைக்கருத்திற்கொண்டு விளையாடும் அணியாக இது விளங்குகின்றது. இத்தகைய சிறப்புக்களை கொண்டு விளங்கும் தென்னாபிரிக்க அணி அரையிறுதிவரை முன்னேறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

இதனைவிட சொந்த மண்ணில் இவர்கள் விளையாடுவது வெற்றிக்கு மேலும் உரமூட்டும் என்றால் அது மிகையாகாது.

இதுவரை நடைபெற்ற 7 உலகக்கிண்ணப்போட்டிகளிலும் எந்தவோர் அணியும் சொந்த மண்ணில் உலகக்கிண்ணத்தை கைப்பற்றியதில்லை. இதற்கு தென்னாபிரிக்காவும் விதிவிலக்கானதல்ல என்று பலர் கூறுகின்றனர்.

இருந்தபோதும் இக்கருத்தை பொய்யாக்கும் விதத்தில் சொந்த மண்ணில் உலகக்கிண்ணத்தை கைப்பற்றியே தீருவோம் என தென்னாபிரிக்க அணித்தலைவர் ஷேன்பொலக் கருத்து வெளியிட்டுள்ளதோடு அதனை வெல்வதற்காக கங்கணங்கட்டிச் செயற்படுவது கண்கூடு.

*- வசந்தன்*

# 'மைலோ' உதைபந்தாட்டம் யாழ்.மத்திக்கு இரண்டாமிடம்

இலங்கை பாடசாலைகளின் உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திய தேசிய ரீதியிலான 'மைலோ' கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் யாழ் மத்திய கல்லூரி அணி 2 ஆம் இடத்தினைப் பெற்றுள்ளது.

மாகாண மட்டங்களில் நடைபெற்ற முதற்சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய அணிகளிலிருந்து 12 அணிகள் தேசிய போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த பன்னிரண்டு அணிகளில் யாழ்.மத்திய கல்லூரி அணி, தான் பங்குபற்றிய 10 போட்டிகளிலும் எதிரணியைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் இவ்வணி கொழும்பு வேலுவன தேசியக் கல்லூரியுடன் மோதியது.

இவ்விறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆட்டம் தொடங்கி இடைவேளைவரை கொழும்பு வேலுவன கல்லூரியின் கையே மேலோங்கி இருந்தது. இடைவேளை முடிபுபோது வேலுவன அணி 3 கோல்களை அடுத்தடுத்து அடித்து முன்னணியில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியதும் யாழ்மத்திய கல்லூரி அணியினர் உக்கிரமாக விளையாடி மூன்று கோல்களை அடித்து சமப்படுத்திக் கொண்டனர். இதன்பின் போட்டி மேலும் விறுவிறுப்படைந்தது.

இந்நிலையில் வேலுவென அணியினர் மேலும் மூன்று கோல்களை அடித்து 6-3 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றனர்.

யாழ்மத்தி அணி சார்பாக கமலஸ், சுரேஸ்ராஜா, ஹேறன்ஸ் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

பத்து வருடங்களின் பின்னர் தேசிய மட்டப் போட்டி ஒன்றில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அணி ஒன்று பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் பங்குபற்றிய யாழ். மத்தி வீரர் எஸ்.கமிலஸ் 16 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கு தெரிவாகியுள்ளார். (ஓ-5)

## இன்றைய ஆட்டங்கள்

அரியாலை ஸ்ரார் அக்கடமி, திரு நெல்வேலி கணேசன் அக்கடமி நிறுவன மாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் மற்றும் வலைப்பந்தாட்ட சிநேக பூர்வ ஆட்டங்கள் இன்று செவ்வாய்க கிழமை முற்பகல் 9 மணிக்கு அரியாலை சனசமூகநிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஓ-5)

* * *

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. (ஓ-86)

* * *

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று செவ்வாய கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஓ-86)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.க.உருத்திரகுமார் அவர்களின் பாசமிகு தந்தையார்

**திரு.இ.கனகசபை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஆசிரியர் கழகம்,*
*யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.*

(14083)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மக்கள் நலன்புரிச் சங்கத்தின் வளர்ச்சி கருதி நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

| | |
|---|---|
| முதலாம் இடம் | 3900 |
| இரண்டாம் இடம் | 0148 |
| மூன்றாம் இடம் | 12440 |

*மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும்,*
*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

(14075)

-நிர்வாகம்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
06 - 08 - 1911



உதிர்வு
06 - 01 - 2003

**அமரர் சின்மயானந்தகுரு யோகாம்பிகை அம்மா**

06.01.2003 திங்கட்கிழமை இறைபதமடைந்த அமரர் சின்மயானந்தகுரு யோகாம்பிகை அம்மா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (05.02.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வேம்படி,*
*வல்வெட்டித்துறை.*

(C/26344)

தகவல்:
Dr.சி.சிவயோககுரு
*(குடும்பத்தினர்)*



## மரண அறிவித்தல்

**திருமதி சபாபதி கண்மணி**

அராலி வடக்கைச்சேர்ந்த திருமதி சபாபதி கண்மணி நேற்று (03.02.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும், சிவராஜா, புஸ்பராணி, இந்திராணி (ஜேர்மன்), சித்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சோமசுந்தரம் வனிதராஜா, அல்போன்ஸ், இராசமணி ஆகியோரின் மாமியாரும் சுசிதர், சுபேத்திரா (கனடா), வரதன், சுஜாதா (லண்டன்), சுதாகர் (லண்டன்), ராஜன், நிலாணி, ஸ்ரீனி, மயூசன் (ஜேர்மன்), உமா, கோபிகா, சங்கர், ரஜீவன், அனோஜிதா, பைரவி, சுந்தா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் அஸ்வினின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.02.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அராலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி வடக்கு,*
*அராலி.*

(14077)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

# நைஜீரியாவில் வெடி விபத்து: முப்பது பேருக்குமேல் உயிரிழப்பு!

## சூறையாடுவோரால் மீட்புப் பணி பாதிப்பு

லாகோஸ்,பெப்.4

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வர்த்தகத் தலைநகரான லாகோஸில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற பாரிய வெடிப்புச் சம்பவத்தில் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். வீடுகள், கடைகள், வங்கிகள் போன்றவை அமைந்திருந்த 4மாடிக் கட்டடத்திலேயே இந்த வெடிச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. நேற்றுப் பிற்பகல்வரை 30 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பலர் ஆபத்தான நிலையில் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் -

கட்டட இடிபாடுகளுக்கிடையில் மேலும் பலர் சிக்கியுள்ளதாகவும்-

இதனால், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்குமென அஞ்சப்படுவதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பினால் அக் கட்டடத்தில் இருந்த வங்கிகள்- குறிப்பாக புருடன்ற் வங்கி- மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. இந்த வங்கிகளில் வைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் பொருள்களைச் சூறையாடுவதில் ஏராளமானவர்கள் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களைக் கட்டுப்படுத்துவதில் பொலீஸார் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். சூறையாடலில் ஈடுபடுவோரால் மீட்புப் பணிகளும் பாதிப்படைந்துள்ளன.

இந்த வெடிப்புச்சம்பவம் விபத்தாக இருப்பதற்கே அதிக சாத்தியக்கூறுகள் இருப்பதாக நைஜீரியப் பொலீஸார் தெரிவித்தனர். ஆனாலும் இது ஒரு குண்டு வெடிப்பு என்றே உள்ளூர் நிர்வாகம் கூறுகிறது. வெடிச்சத்தம் பல கிலோமீற்றர்கள் தொலைவு வரை கேட்டதாகவும் -


4மாடிக் கட்டடமும் அதன் அருகிலிருந்த மற்றொரு கட்டடமும் இதில் தகர்ந்து போய்விட்டதாகவும் -

ஆகவே, குண்டொன்று வெடித்ததாலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக நம்புவதாகவும் உள்ளூர் வட்டாரங்கள் தெரிவித்தன.

லாகோஸில் இராணுவ ஆயுதக் களஞ்சியமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆயிரம் பேர்வரை உயிரிழந்த சம்பவத்தின் முதல் வருட நினைவுதினம் கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## நைஜீரிய அனர்த்தத்தில்...


சூறையாடும் சிலர்...


காயமடைந்த ஒருவர்...


வீதியில் இருந்து வங்கிப் பணம் மீட்பு

# விண்வெளி நிலையம் நோக்கி ரஷ்ய விண்கலம் புறப்பட்டது

மொஸ்கோ,பெப்.4

சர்வதேச விண்வெளி நிலையத்தை நோக்கி ஆளில்லா விண்கலத்தை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது ரஷ்யா.

இதில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு தேவையான பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த விண்கலம் கஜகஸ்தானில் பைகானூர்ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3.59 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)


அமெரிக்காவின் கொலம்பியா விண்வெளிக் கலம் வெடித்துச் சிதறியதில் இறந்த விண்வெளி வீரர்களின் உடைகள் பாதி எரிந்த நிலையில் காணப்படுகின்றன.

# 'கொலம்பியா' விண்வெளி பயணிகளின் எரிந்த உடற்பாகங்கள் கண்டுபிடிப்பு

வாஷிங்ரன்,பெப்.4

அமெரிக்காவின் கொலம்பியா விண்வெளிக்கலம் வெடித்துச் சிதறிப் பலியான விண்வெளி விஞ்ஞானிகளின் எரிந்த உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

டெக்சாஸ் பொலீஸார் இத்தகவலைத் தெரிவித்தனர்.

டெக்சாஸின் ஹெம்பில் பகுதியில் கொலம்பியாவின் உடைந்த பாகங்கள் வீழ்ந்து கிடக்கின்றன. அதில் கருகிய மனித உடற்பாகங்களும் இருக்கின்றன என்று பெண் பொலீஸ் அதிகாரி கரென் ஸ்மல் கூறினார்.

டெக்சாஸ், ஆர்கன்சாஸ், லூசியானா ஆகிய மாகாணங்களின் பல பகுதிகளில் 500 சதுர மைல் பரப்பில் கொலம்பியாவின் உடைந்த பகுதிகள் சிதறிக் கிடக்கின்றன. வீட்டுக் கூரைகள், வாகனம் நிறுத்தும் இடங்கள், நெடுஞ்சாலைகள் உட்பட பல இடங்களில் ஹெல்மெட் (தலைக் கவசம்) முதல் பெரிய உலோகத் தகடுகள் வரை விழுந்துள்ளன. ஆனால், அதிர்ஷ்டவசமாக மனிதர்கள் யார் மீதும் அவை விழவில்லை.

விண்வெளிக்கலம் வெடித்து உலோகத் துண்டுகள் எங்கெங்கே விழுந்து கிடக்கின்றன என்பது, செயற்கைக்கோள் மூலம் படம் பிடிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படும் என்றும் விஞ்ஞானிகள் கூறினர்.

கொலம்பியா விண்வெளிக்கலம் நடுவானில் வெடித்துச் சிதறியதற்கு அதிக வெப்பமே காரணம் என்று நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. இந்த விபத்தைத் தொடர்ந்து அனைத்து விண்வெளித் திட்டங்களையும் நாசா தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

விபத்துக் குறித்து நாசா நிர்வாகி சியான் ஓகீ∴ப் கூறியதாவது:-

கலத்தின் எரிபொருள் கலனுடன் இணைந்த சிறிய கவசம் தளர்ந்து அதன் இடப்பக்க இறக்கையை தாக்கியுள்ளது. இதை கலம் வெடித்துச் சிதறுவதற்குச் சில நிமிடங்களின் முன்னர்தான் நாசா கண்டுபிடித்தது.

கலம் பூமியிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இப்பாதுகாப்புக் கவசத்தில பிரச்சினையை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். ஆனால், கலம் மேலெழும்பிச் செல்லும்போதும் பூமிக்குத் திரும்பும்போது அது ஒரு பிரச்சினையாக இருக்காது என்று அவர்கள் கருதினர்.

கலத்தில் இயந்திர மனிதன் வைக்கப்பட்டிருக்குமானால் புகைப்படக்கருவியின் உதவியுடன் கோளாறு கடுமையானதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாம்.

விண்கலத்தையும் அதில் பயணித்தவர்களையும் கடும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்பத்தை ஆராய்வது மிகவும் முக்கியமானதாகும்.

கலம் திரும்பிவரும்போது அதனுடனான தொடர்பு துண்டிக்கப்படும் முன்னர் அதன் இடப்பக்க இறக்கையில் வெப்பத்தை அளவிடும் கருவியில் கோளாறு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் அதிக வெப்பம் காரணமாக கலத்தின் கட்டுமான அமைப்பு சிதைந்திருக்கக்கூடும். விமானப்படை, கடற்படையைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட சுய அதிகாரம் கொண்ட அமைப்பு இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தும். நாசாவும் அதன் குழுவும் தனிப்பட்ட முறையில் விசாரிக்கும் என்றார் சியான் ஓகீ∴ப். (ஒ)


கொலம்பியா விண்கலம் கடந்த மாதம் ஏவப்பட்டபோது...

## அமெரிக்காவில் நிலநடுக்கம்

சான்ரமோன்,பெப்.4

அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 24 முறைகள் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. அன்று காலை 8.20 மணிக்கு முதன் முதலாக ஏற்பட்ட நிலநடுக்கம் நாள் முழுவதும் நீடித்ததாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு!

பாகிஸ்தானின் கராச்சிநகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்தனர். பாகிஸ்தானிய தேசிய எண்ணெய் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தின் அருகே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில் வந்த ஒருவர் இக்குண்டு வெடிப்பில் இறந்துள்ளார். இதனால் அவரே வெடிகுண்டைக் கொண்டுவந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஒ)

## விண்கல விபத்தில் 7 ஆம் எண்

சண்டிகர்,பெப்.4

விபத்துக்குள்ளான கொலம்பியா விண்கலத்துக்கும் அதில் சென்ற விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவுக்கும் ஏழாம் எண்ணானது பொருத்தமற்றதாக அமைந்துவிட்டதாக சண்டிகரிலுள்ள 'ஜோதிடர் மதன் குப்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

விண்கலத்தில் பயணித்தவர்கள் 7 பேர். அது ஏவப்பட்ட தினம் ஜனவரி 16 ஆம் திகதி. விண்ணில் அவர்கள் இருந்த நாள்களும் 16 தான். 16 ஐக் கூட்டினால் வருவதும் 7. ஆக எல்லாமே 7 ஆக அமைந்து விட்டது என்று அவர் கூறியுள்ளார்.

விண்கலம் வெடித்துச் சிதறியது அமெரிக்க நேரப்படி காலை 9.43 மணிக்கு இதன் கூட்டும் 7 தான்.

கல்பனா என்ற பெயரும் 7 ஆங்கில எழுத்துக்களையே கொண்டுள்ளது.

கடைசியாக அவரின் பிறந்த தினம் 1.07.1961. இந்த எண்களைக் கூட்டினாலும் வருவது 7 தான்.

தற்செயலாக நிகழ்ந்த விபத்து இத்தனை ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளமை ஆச்சரியத்துக்குரிய ஒன்று என ஜோதிடர் கூறுகிறார்.

## பனிமலைச் சிகரத்துக்கு பாப்பரசரின் பெயர்

வத்திக்கான்,பெப்.4

அலாஸ்காவிலுள்ள ஒரு பனிமலைச் சிகரத்துக்கு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் பெயர் சூட்டப்படவுள்ளது.

வத்திகான் அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

அந்தச் சிகரம் ஆயிரத்து 110 மீற்றர்கள் உயரம் கொண்டதாகும்.

பாப்பரசர் பதவிக்கு வந்து 25 ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு காலம் தொடர்ந்து இப்பதவியில் இதற்கு முன்யாரும் இருந்ததில்லை. இதைக் குறிக்கும் வண்ணமே அந்த சிகரத்துக்கு அவரது பெயர் சூட்டப்படவுள்ளது. கடந்த மாதம் 17ஆம் திகதி இந்தச் சிகரத்தில் சிலுவை ஒன்றை கத்தோலிக்க தேவாலய அலுவலக இயக்குநர் லிபேரியோ அண்ரெட்டா நாட்டுவைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஈராக் சென்ற பிரிட்டிஷ் கப்பல் 'கிரீன்பீஸ்' அமைப்பால் தடுப்பு

பிரிட்டிஷ் துறைமுகத்திலிருந்து ஈராக்கடல் பகுதியை நோக்கிச் செல்ல விடாமல் பிரிட்டிஷ் போர்க் கப்பலைத் தடுத்து நிறுத்தினர் 'கிரீன்பீஸ்' என்னும் சுற்றுச்சூழல் அமைப்பினர்.

ஈராக் மீது இராணுவத் தாக்குதல் தொடங்கப்பட்டால் அங்கு பயன்படுத்துவதற்கான இராணுவத் தளபாடங்களை ஏற்றிக்கொண்டு 'சௌதாம்பரன்' துறைமுகத்திலிருந்து அக்கப்பல் புறப்படுவதாக இருந்தது. இதையறிந்து அத்துறைமுகத்திலிருந்து கப்பல் வெளியேறும் பாதையில் 'கிரீன்பீஸ்' அமைப்பினர் படகுகளில் சென்று முற்றுகையிட்டனர்.

இதனையடுத்து அக்கப்பல் புறப்படவில்லை. ஆனால், இராணுவத் தளபாடம் ஏற்றிய அக்கப்பல் புறப்படுவதாக இல்லை என்று கூறியது பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகம்.

# பழைய பத்திரிகைகள் விற்பனைக்கு உண்டு

யாழ்.நகரில் பழைய பத்திரிகைகள் 2000kg உடன் விற்பனைக்குண்டு. விலை விவரம், தொலைபேசி எண் ஆகியவற்றுடன் பின்வரும் இலக்கத்துக்கு Fax அனுப்பவும்.

பொதுமுகாமையாளர்
Fax No.: 01-439987 (14062)



இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
பனை அபிவிருத்திச் சபை

# பதவி வெற்றிடங்கள்

பனை அபிவிருத்திச் சபை, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஆரம்பிக்கவுள்ள 'கற்பகம்' விற்பனை நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் விற்பனை உதவியாளர்களாகக் கடமையாற்ற க.பொ.த. (சாதாரண/உயர்தரம்) சித்தியடைந்த 25இற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர்களாக இருக்கவேண்டும்.

*விண்ணப்ப முடிவுதிகதி: 10. 02. 2003*

மேலதிக விவரங்களுக்கு பனை அபிவிருத்திச் சபையின் கொழும்பு நகர அலுவலகம், யாழ். தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

பனை அபிவிருத்திச் சபை
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 2222034

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை
244, காலி வீதி, கொழும்பு 04.
01-586820. (C/26343)





உ
சிவமயம்
நல்லூர் அருள்மிகு கைலாசபிள்ளையார் கோயில்

## மஹா கும்பாபிஷேகம்

ஐங்கரன் அடியார்களே!
எதிர்வரும் (06.02.2003) வியாழக்கிழமை
காலை மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

இன்று (04.02.2003) செவ்வாய்க்கிழமை
காலை 7.00 மணிமுதல் விசேஷ சந்தி, பூதசுத்தி 2ஆம் கால யாக பூஜைகள், பாவனாபிஷேகம், சகல மூர்த்திகளுக்கும் ஸகஸ்ரநாம ஹோமங்கள், கணபதி த்வியபஞ்சாசத் விசேஷ திரவிய ஹோமம், யாக தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறைப் பாராயணம்.
☞ காலை 8 மணிமுதல் மாலை 5.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்.
மாலை 3 மணிமுதல் கிரியைகள் தொடர்ந்து இடம்பெறும்.
*அடியார்கள் வருக! அருள் பெறுக!*

ஸ்ரீ கைலாசபிள்ளையார் தேவஸ்தானம்,
நல்லூர்.
(சி-26340)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 16 - 06 - 1922
மறைவு 05 - 01 - 2003

## திருமதி
# ஜயாத்துரை தையல்நாயகி

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உடன் ஆறுதல் தந்து உதவிகள் புரிந்தோருக்கும் தொலைபேசிமூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் தோளோடு தோள் நின்று உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (04.02.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
கணவர்: சி.ஜயாத்துரை
*(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்).*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*'தையல் வாசம்',*
*சரசாலை தெற்கு,*
*சாவகச்சேரி.* (14056)


# தொழிலாளர் கற்கைநெறி மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கற்கைநெறி டிப்ளோமா மாணவர் சங்கத்தின் கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறியைப் பயின்ற அனைத்து மாணவர்களையும் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் க.பரராசசேகரன் கேட்டுள்ளார்.

(ஒ-9)

# சமாதான பேரணி

மல்லாகம்,பெப்.4

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்கு மக்களால் நடத்தப்பட்ட சமாதான செபமாலைப் பேரணி கடந்த சனிக்கிழமை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பித்து குறாவத்தை, மல்லாகம் ஏழாம் கட்டை குழமங்கால் வழியாக மல்லாகம் சதா சகாய மாதா ஆலயத்தைச் சென்றடைந்தது.

பேரணி சென்ற வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பலநூற்றுக்கணக்கான கிறிஸ்தவ மக்கள், கிறிஸ்தவ குருமார்கள் ஆகியோர் இப்பேரணியில் கலந்துகொண்டு நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டிப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

(ஒ-ரி)

# கிராம அலுவலர் தரமுயர்வு

வலிகாமம் தெற்கு, பெப்.4

வலி.தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றி வந்த ஏழு கிராம சேவை உத்தியோகத்தர்கள் முதலாம் தர கிராம உத்தியோகத்தர்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

வி.மா.ராமலிங்கம், க.திருநாவுக்கரசு, சே.வைத்திபநாதன், ச.ரவீந்திரன், செ.ஞானசபேசன், தி.புலேந்திரராஜா, எஸ்.இரவீந்திரன் ஆகிய கிராமசேவையாளர்களே தரம் உயர்த்தப்பட்டவர்கள் ஆவர்.

(ஒ-152)

# கிழங்கு அறுவடை

கோப்பாய்,பெப்.4

கோப்பாய் நீர்வேலிப் பகுதியில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கு விவசாயிகளினால் அறுவடை செய்யப்பட்டுவருகிறது.

கொழும்பு மற்றும் பிற இடங்களில் இருந்து வந்த வர்த்தகர்கள் நேரடியாக வந்து இந்தக் கிழங்கைக் கொள்வனவு செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

(ஒ-72)

# சோமஸ்கந்தாவில் ஆங்கிலமூல வகுப்புகள்

கோப்பாய்,பெப்.4

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் தரம் 6 மாணவர்களுக்கு ஆங்கில மொழிமூலம் முதற்கட்டமாகக் குறிப்பிட்ட சில பாடங்கள் கற்பிக்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு நாளை புதன்கிழமை நடைபெறும்.

(ஒ-72)

# பண்ணிசை போட்டி

வலிகாமம் தெற்கு,பெப்.4

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் பண்ணிசைப் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயத்தில் அன்றையதினம் காலை ஒன்பது மணிமுதல் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

புண்ணிய நாச்சியம்மையார் நினைவு தினத்தை முன்னிட்டு வருடந்தோறும் இப்பண்ணிசைப் போட்டி நடைபெற்றுவருகின்றது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெறும்.

(ஒ-152)


# தேவை

ஆண் தொழிலாளர்கள்
நேரில் சமுகமளிக்கவும்.
*பணிப்பாளர்:*
சென்றல் நேர்ஸிங் ஹோம்
350, பலாலி வீதி,
திருநெல்வேலி. (14053)



# 90ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
## வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

தோற்றம் 07.06.1943
மறைவு 07.11.2002

07.11.2002 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்தக் கிரியைகள் நாளை (05.02.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வி.எம். வீதி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*
\- குடும்பத்தினர்.
(14060)



# கண்ணீர் அஞ்சலி



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்பகால நற்சேவைத் தொண்டனும், தற்போதைய உப தலைவரும், தர்மகர்த்தா சபை உறுப்பினருமாகிய

## S.R.கனகசபை அவர்கள்

இயற்கையெய்தியதையிட்டு அவரின் மீட்கமுடியாத இழப்பினால் வருந்தும் அருமை மகனதும், சகோதரர்கள், உற்றார், உறவினர் அனைவரதும் துயரக்கடலில் எமது சபையினரது கண்ணீர்த் துளிகளையும் சங்கமமாக்குகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றோம்.

*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி*
*அமுதசுரபி அன்னதான சபையினர்.*
(14071)



# மரண அறிவித்தல்கள்

நயினாதீவு
## சின்னத்தம்பி இராமநாதன் கனகசபை
*(S.R.கனகசபை)*

நயினாதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி இராமநாதன் கனகசபை அவர்கள் நேற்று (03.02.2003) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நயினாதீவு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய அறங்காவலர் சபைத் தலைவரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்பகால உறுப்பினரும், உபதலைவரும், நயினாதீவு கிராம சபையின் முன்னாள் உபதலைவரும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மகனாரும், வீரகத்தி - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் மற்றும் சரஸ்வதியம்மாவின் அன்புக் கணவரும், உருத்திரகுமாரன் (B.A. ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும் சுபோதியின் அன்பு மாமனாரும் கௌரிசங்கர், அபிராமி ஆகியோரின் அருமைப் பேரனாரும் காலஞ்சென்றவர்களான S.R.பரமலிங்கம், S.R.சின்னத்துரை, S.R.கோபாலபிள்ளை மற்றும் S.R.முத்தையா, தையலம்மை, சிவக்கொழுந்து, விசாலாட்சி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், பவானி மற்றும் விஜயதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், முருகேசு, சற்குணம், சீதேவிப்பிள்ளை, சவுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் டாக்டர் தியாகர் - திருநாவுக்கரசு (சட்டத்தரணி) பாக்கியம் தம்பதிகளின் அன்புச் சம்பந்தியும் S.R.S. ஜெகநாதன் (கனடா) அவர்களின் பாசமிகு சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு, நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6 ஆம் வட்டாரம், நயினாதீவு.*
தகவல்:
*க.உருத்திரகுமாரன் (மகன்).*
(14069)

## சபாபதிப்பிள்ளை செல்லத்துரை
*(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)*

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை செல்லத்துரை நேற்று (03.02.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், இராசமணியின் அன்புக் கணவரும், சசிச் செல்வி(கனடா), தயாளசெல்வி(கனடா), பத்மசெல்வி(பிரான்ஸ்), ராஜசெல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார்(கனடா), தனராஜன் (கனடா), மோகனதாஸன்(பிரான்ஸ்), நாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது யாழ்ப்பாணம், இராசாவின்தோட்டம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*68/5, இராசாவின்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*
தகவல்:
இராசமணி *(மனைவி).*
(14063)

# இந்து விவகார அமைச்சரின் சுதந்திர தினச் செய்தி

கொழும்பு,பெப்.4

இன்று கொண்டாடப்படும் இலங்கையின் 55 ஆவது சுதந்திர தினத்தையொட்டி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் வெளியிட்ட செய்தி இது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகள் நிறைவுற்ற போதிலும், இலங்கைவாழ் தமிழ்மக்களுககு அந்த சுதந்திரம் இன்னமும் கிடைக்கவில்லை. இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த நாள் தொடக்கம் அந்த சுதந்திரத்துக்காக பாடுபட்டு வந்த தமிழர் பரம்பரை அந்த சுதந்திரத்தை அனுபவிக்க முடியாதநிலையில் இருந்து வருவதை இந்த நாடு அறியும். சிங்கள தேசியத் தலைவர்களை நம்பி எமது தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றமடைந்த வரலாற்றையும் இச் சுதந்திர தினத்தில் நினைவு கூர வேண்டியுள்ளோம். இந்த நாட்டை ஆட்சி செய்த இரு அரசாங்கத்திடமும் தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடி வந்ததையும் அனைவரும் அறிவர்.

சுதந்திரம் இலங்கை மக்களுக்கு பிரிட்டிஷ் அரசால் வழங்கப்பட்டிருநத போதும் இந்நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்தினால் அடக்கி ஒடுக்கப்படும் நிலையே தொடர்கிறது. இலங்கை அந்நியர் அட்சிக்கு உட்படுவதற்கு முன்பு தமிழ் மக்களுக்கு தனி அரசு ஒன்று இருந்தது என்பதையும் வரலாறு கூறி நிற்கின்றது. ஆங்கிலேயர் இலங்கையை ஐக்கியப்படுத்தி ஆட்சி செய்வதற்காக தமிழ், சிங்கள இராச்சியங்களை ஒன்றாக இணைத்திருந்தனர். ஆனால், அவர்கள் 150 ஆண்டுகளின் பின்னர் சுதந்திரத்தை வழங்கிவிட்டு செல்லும்போது தமிழ் இராச்சியத்தை பிரித்துக் கொடுக்கவில்லை. சிங்களத் தலைவர்கள், தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி ஆட்சி செய்வார்கள் என்று ஆங்கிலேயர் உறுதியளித்துச் சென்றனர்.

ஆனால், அவர்கள் அளித்த உறுதி நிறைவேற்றப்படவில்லை. 1948 இல் சுதந்திரம் கிடைத்த சில மாதங்களுக்குள் 10 இலட்சம் தமிழ் மக்களின் குடியுரிமை, பிரஜாவுரிமை என்பன பறிக்கப்பட்டு நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள். இதே போன்று ஈழம் வாழ் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு இரண்டாந்தர பிரஜைகள் ஆக்கப்பட்டனர். தமிழ மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக அஹிம்சை வழியில் போராட்டம் நடத்தினார்கள். இதற்கு இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் செவி சாய்க்கவில்லை. அதன் பின்பு தமிழ் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதப்போராட்டம் 20 வருடங்களாகத் தொடர்கிறது. அந்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்து சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதாக உறுதியளித்த ஐக்கிய தேசியக் கட்சியில் நான் போட்டியிட்டு வெற்றிபெற்றேன்.

தமிழ் மக்கள் இன்று ஐக்கியப்பட்டு தமது கோரிக்கைகளை ஒரு தலைமையின் கீழ் முன்னெக்கும் வேளையில் அரசாங்கத்திலிருந்து அக்கோரிக்கைகளுக்குத் துணைபுரியவே நான் ஐக்கியதேசிய கட்சியில் சேர்ந்து போட்டியிட்டேன். அந்த வகையில் நான் கடந்த ஓர் ஆண்டாக அமைச்சராக இருந்து தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்காகக் குரல் கொடுத்து வருகிறேன். தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாத வேளையில் 55 ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்படுகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக் கூடிய அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தி யாவரும் பூரண சுதந்திரத்தை அனுபவிக்க இந்த சுதந்திர தின விழா வழிவகுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

(ம)

# ஈராக்கிலுள்ள இலங்கைத் தூதரக வரைபடம் கேட்கிறது அமெரிக்கா

கொழும்பு,பெப்.4

ஈராக்கிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் வரைபடம் மற்றும் புகைப்படம் என்பவற்றை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் அமெரிக்கா உத்தியோகபூர்வமாகக் கேட்டுள்ளது.

ஈராக் மீது யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதும் அங்குள்ள இலங்கைத் தூதரகத்தை பாதுகாப்பதற்காகவே அதன் வரைபடத்தை அமெரிக்கா கேட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஈராக் மீதான யுத்தத்தின்போது கணனிமூலம் வழிநடத்தப்படும் ஏவுகணைத்தாக்குதல் திட்டமே வகுக்கப்பட்டிருப்பதாகவும் -

அதன்போது தனது நேசநாடுகளின் தூதரகங்கள் தாக்கப்படாமல் இருப்பதற்காக அவற்றின் வரைபடங்கள், புகைப்படங்கள் மற்றும் விவரங்களை - அமெரிக்கா அந்தந்த நாடுகளிடம் கேட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# அத்துருகிரியவில் ஆயுதம் மீட்கப்பட்ட சம்பவம்: வழக்கை வாபஸ் பெற சட்டமாஅதிபர் பணிப்பு

அததுருகிரிய பகுதியில் கடந்த வருடம் வீடொன்றிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டிருந்த இராணுவத்தினர் ஐவர் மற்றும் தமிழ்க குழு உறுப்பினர் ஒருவர் ஆகியோருக்கு எதிரான வழக்கை வாபஸ் பெறுமாறு சட்டமாஅதிபர், பொலீஸ்மா அதிபருக்கு பணிப்புரைவிடுத்துள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் வீடொன்றுக்குள் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்ட இந்த 6 பேரும் இதுவரை பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக் கெதிரான வழக்கு கண்டி நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது.

இவர்கள் தவறான நோக்கத்துடன் ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கவில்லை என்பது விசாரணைகளில் தெரியவருவதால் அவர்களுக்கெதிரான வழக்கை வாபஸ் பெறுமாறு சட்டமாஅதிபர் பொலீஸ்மா அதிபருக்கு பணித்துள்ளார்.

(ம-4)


## தவறிவிட்டது

பருத்தித்துறையிலிருந்து உடுப்பிட்டிக்குச் செல்லும் வீதியில் மோறிஸ் மைனர் காரின் புத்தகம் (இல. EN 6349) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடுப்பிட்டி மதுஷன் கொமினிக்கேசனில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (C/26350)

## பதவிவெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் தொலைபேசி நிலையத்தில் பணியாற்ற ஆள் தேவை.
தொடர்பு: 071-346630
(C/26355)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக தாவரவியல்துறையில் ஆய்வுகூட உதவியாளராக பணியாற்றிவரும் *திரு.இ.செல்வரத்தினம்* அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் க.இராமலிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊழியர்,தாவரவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
(14084)

## மன நிறைவுடன் நன்றிகள்

2000 ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது, சாவகச்சேரி நகரில் உள்ள எமது சொத்துக்களைவிட்டு வெளியேறிய போது 46 வணிக நிலையங்களிலிருந்து எமது சொத்துக்களையும், ஆவணங்களையும் மீட்டு அதற்குரிய பெறுமதியான இரண்டரைக்கோடி ரூபாவினை கடந்த, 31.01.2003 அன்று பளை வருவாய்ப் பகுதி செயலகத்தில் கையளித்த தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் அவர்களுக்கும், யாழ். மாவட்ட நிதிப்பொறுப்பாளர் அவர்களுக்கும், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர், சேரன், இளவேனில் பொறுப்பாளர்களுக்கும், கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர், நிர்வாக உறுப்பினர் அவர்களுக்கும், மல்லாவி வர்த்தக சங்கத், தலைவர், நிர்வாக உறுப்பினர் அவர்களுக்கும், இப்பொருள்களை மீட்டெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் அனைவருக்கும்

**எமது மன்றத்தின் சார்பில் நன்றிகள்.**

சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.
(C/26340)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்மாவட்ட ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு (புதிய நேரம்) யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள் யாழ்மாவட்ட பல நோக்கு கூட்டுறவு தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர், சுகாதாரப் பிரிவுப் பொறுப்பாளர், யாழ்.நல்லூர் கோட்டப்பொறுப்பாளர், வலி - கிழக்குப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட உணவு; மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


சகல மருந்தக உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறும், மன்றத்தின் சந்தாவினைச் செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் மன்றத்தின் செலாளலயன் க.மு.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ம)

★ ★ ★

யாழ்மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்மாவட்டத்திலுள்ள 'ஏ','பி' தர மத்தியஸ்தர்களாகவுள்ள அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவி திருமதி ஜே.ஏ.எவ்.ரூபசிங்கம் கேட்டுள்ளார். (ஒ-5)


ராஜா யாழ்ப்பாணம்.
விஜய், சிம்ரன், வடிவேல், ...
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறஞ்சனாஸ் சங்கானை

M.G.R. ராதா சலூஜா
நடித்த
இதயக்கனி
கா.நே. : 11.00,2.45,6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு 9.45 மட்டும்
TOMB RAIDER (C-26298)

நாகம்ஸ் சுன்னாகம்.
இன்று முதல்
ஜெயசூர்யா. காவ்யா.வையாபுரி.கோவைசரளா
நடிக்க
என் மனவானில்
(கலர்)
காட்சிகள் தினசரி: 11.00. 3.00. 6.30 (பு.நே.)


# அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து வவுனியாவில் ஆராய்வு

'சிரான்' திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான குழுக்கூட்டம் நேற்று வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் முக்கியமாக இனங்காணப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக குழுநிலையில் ஆராயப்பட்டதுடன் இதற்கான குழுக்களும் வெவ்வேறு மட்டங்களில் அமைக்கப்பட்டதாக எழிலன் தெரிவித்தார்.

வவுனியாவில் உடனடியாக மேற கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்களாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது, கண்ணிவெடிகளை அகற்றுதல், போரினால் பாதிக்கப்பட்ட மக்களை இனங்கண்டு சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் வாழ்க்கையினை மேம்படுத்துவது ஆகியன இனங்காணப்பட்டு ஆராயப பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-ரி)

## கசிப்பு வழக்கில் 7,500 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,பெப்.4

கசிப்பு வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் இருவருக்கு 7ஆயிரத்து 500ரூபாவை யாழ்.நீதி மன்றம் அபராதமாக விதித்துள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த சுப்பையா யோகநாதன் என்பவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும்-

உரும்பிராய் அன்னங்கையைச் சேர்ந்த தேவராசா ஜெயந்தி என்பவருக்கு 3ஆயிரம் ரூபா தண்டமும், ஐநூறு ரூபா தர்மப் பணமும் செலுத்தும்படி யாழ்நீதிமன்ற பதில் நீதிவான் அரியநாயகம் உத்தரவிட் டுள்ளார். (ம-8)

## பிரான்ஸ் அமைச்சர் யாழ்.விருகை

பிரான்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் றினாட் மஸ்கஸியர் (Renaud Muselier) எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.விஜயம் செய்யவுள்ளார்.

அன்று யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் அவர் பங்கேற்பார். (ம-8)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சபாரத்தினம்

தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சபாரத்தினம் 03.02.2003இல் காலமானார்.

அன்னார் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சீதாலஷ்சுமி (நகரசபை, பருத்தித்துறை), ஜெயலஷ்சுமி (ஆதார வைத்தியசாலை, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்ததையாரும் சிவசண்முகநாதன் (நாவற்குழி), தர்மலிங்கம் (கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சரவணபவனின் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2003) செவ்வாய்க கிழமை பி.ப. 2.00மணியளவில் தும்பளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவமாதா ஒழுங்கை,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*
(c/26348)

தகவல்:
திருமதி சிவசண்முகநாதன் சீதாலஷ்சுமி
(மகள்)

## அக்னெஸ் இராசம்மா மரியாம்பிள்ளை

*(கலாபூசணம், சங்கீத பூசணம்)*

கரவெட்டியைச் சேர்ந்த கலாபூசணம், சங்கீதபூசணம் திருமதி அக்னெஸ் இராசம்மா மரியாம்பிள்ளை (முன்னாள் ஆசிரியை, கரவெட்டி திரு இருதயக்கல்லூரி) நேற்று (03.02.2003) திங்கட்கிழமை கரவெட்டியில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் சு.மரியாம்பிள்ளையின் (இராசு) அன்பு மனைவியும், றூபன் (தினக்குரல் - கொழும்பு), சுரேந்திரன் (அருள் ஊற்று - கண்டி), வரதராஜன் (சக்தி TV), ராஜினி (ஸ்கொட்லாந்து), காலஞ்சென்ற தீசன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*புனித அந்தோனியார் கோயிலடி,*
*கரவெட்டி.*
(c -26353)

தகவல்:
சு.மரியாம்பிள்ளை
(கணவர்)

## திருமதி சுப்பிரமணியம் பூரணாம்பிகை

*(வேலணை 8ஆம் வட்டாரம்)*

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பூரணாம்பிகை அவர்கள் நேற்று (03.02.2003) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் செல்வமலர், உதயராணி(பிரான்ஸ்), பிரேமராணி, இன்பராஜன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருஞானசம்மந்தன், புவனேஸ்வரி, காலஞ்சென்ற அப்புலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கனகரத்தினம் (ப.நோ.கூ.ச.மட்டுவில்), ரகுபதீந்திரன்(பிரான்ஸ்), ஞானரத்தினம், சுமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் கஜரூபன், அஜந்தா, தனுசன், றஜிந்தா, விஜிந்தன், உதயபாலன், சயந்தன், சாருகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2003) செவ்வாய்க் கிழமை பி.ப3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு, எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*81. பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி.*
(14082)

தகவல்:
க.சுப்பிரமணியம்
(கணவர்)

## மனோன்மணி கணபதிப்பிள்ளை

காரைநகர் கோவளத்தைச் சேர்ந்த மனோன்மணி கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (03.02.2003), திங்கட்கிழமை கொச்சிக்கடையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் வாமதேவன்; புஸ்பவதி, புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, சிவசோதி கோடிலிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(04.02.2003) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கொச்சிக்கடை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொழும்பு பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*74/12,பள்ளஞ்சேனை வீதி,*
*கொச்சிக்கடை.*
(14080)

தகவல்:
க.வாமதேவன (மகன்)

# ஜே.வி.பியினர் மீதான தாக்குதல் சம்பவம்: சந்தேக நபர்களை கைதுசெய்ய உத்தரவு

## இருவர் தலைமறைவு; பொலீஸார் தேடுதல்

கடந்த 28 ஆம் திகதி அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஜே.வி.பியின் பொதுக கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சரின் பணிப்பின் பேரில், சம்பவம் தொடர்பாக தமது அறிக்கையை எப்பாவலப் பொலீஸார் தம்புத்கம நீதிவானிடம் சமர்ப்பித்தனர்.

அதனைப் பரிசீலனை செய்த நீதிவான் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் தலாவ பிரதேசசபை உறுப்பினர்களான சந்தன பிரதீப்சில்வா, சியாமின்த குமார விஜேசிங்க ஆகிய இருவர் உட்பட அனைத்து சந்தேக நபர்களையும் உடன் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலீஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு தாம் தேடுதல் நடத்தியபோது சந்தேக நபர்கள் இருவரும் தலைமறைவாகி, கிராமத்தைவிட்டு வெளியேறினர் என்பதை அறியமுடிந்ததாக பொலீஸர்ர் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.தேடுதலைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறு நீதிவான் பொலீஸாரைப் பணித்தார்.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் பௌத்தபிக்கு ஒருவர் உட்பட நால்வர் படுகாயமடைந்து அநுராதபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

### சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைப் பெற்றதாக இருக்கவேண்டும்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுகள் இடம்பெறும் நேரத்திலும் படைகளுக்கு சிறுவர்களைப் புலிகள் சேர்ப்பது குறித்தும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்தும் விசனம் தரும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. படைகளுக்கு சிறுவர்களைச் சேர்க்க வேண்டாம் என்று விசேட கோரிக்கையை புலிகளுக்கு விடுக்கின்றேன் - என்றுள்ளது. (ம-3)

### மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் அரசியல் துறையினர் மற்றும் பொலீஸார் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

பள்ளிமுனை மீனவர் கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தில் 16 இந்திய மனவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது எடுக்கப்படவேண்டிய சட்ட நடவடிக்கை குறித்து இன்று ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

### இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரதினத்தை பகிஷ்கரிக்கும்படி கோரி பல அமைப்புகள் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளன.

அதேவேளை -

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரின் யாழ்.விஜயத்தைக் கண்டித்து தென்மராட்சிப் பகுதியில் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. (ம-3-117)

### கீழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூத்த அதிகாரி ஒருவருக்கு பதிலாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த கீழ் நிலைப் பெண் அதிகாரி ஒருவரே ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பப்பட்டுள்ளார்.

ஒத்திகையின்போது இராணுவ உயர்நிலை அதிகாரிகள் அவருக்கு 'சல்யூட்' அடித்து மரியாதை செலுத்தினர். இது அவர்களுக்கு விசனத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளதுடன் சர்ச்சையையும் தோற்றுவித்துள்ளது. (ம-4)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள தேசபிதா டி.எஸ்.சேனநாயக்காவின் சிலைக்கு மாலை அணிவிப்பார். தொடர்ந்து அமைச்சர்களும் எதிர்கட்சித் தலைவரும் மலர் வளையங்களை வைத்து மரியாதை செய்வர்.

இதனைத் தொடர்ந்து 21 மரியாதை பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும். பின் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதியும் பிரதமரும் ஏற்றுக்கொள்வர். அதனை அடுத்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு சுதந்திரதின உரை நிகழ்துவார். (ம)

### மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று இரவு மட்டக்களப்பு மாவட்ட வர்த்தகர்களுக்கு தொலைபேசி மூலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள் ளது.

இன்று மட்டக்களப்பில் சகல இடங்களிலும் கறுப்புக்கொடி ஏற்றி பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன. வவுனியா வளாகம், கல்வியியல் கல்லூரி மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றின் மாணவர்கள் நடத்திய இப்பேரணியில் வவுனியா நகருக்கு வெளியிலுள்ள பாடசாலைகளின் மாணவர்ளும் கலந்துகொண்டனர்.

மேலதிக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட பிரதமருக்கான மகஜரில் எம்மக்கள் சொந்த இடங்களில் சுதந்திரமாக வாழ வழிவகை செய்யுங்கள் என்று மாணவர்கள் கோரியிருக்கின்றனர்.

இராணுவத்தை எமது பிரதேசங்களிலிருந்து வெளியேற்றி எமது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மாபெரும் சக்தியாகிய மாணவர் சக்தியை வெகுண்டெழ வைப்பது ஓர் அரசிற்கு ஏற்றதல்ல எனவும் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.(ம)

### புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஒரு புதிய யுகத்தை தோற்றுவிக்கவேண்டியிருக்கிறது.

சுதந்திரதினத்தை முன்னிட்டு விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

நாம் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை அர்த்தமுடையதாக அனுபவிக்கும் பொருட்டு சுதந்திரத்தின் பின்னர் நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் மிகவும் பாடுபடவேண்டி ஏற்பட்டது.

இடைக்கிடையே ஏற்பட்ட ஒற்றுமையின்மை மற்றும் வாத பேதங்கள் என்பன நாட்டினதும், மக்களினதும் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்தன. இதனால் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன மோதலொன்றும் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பயங்கரவாதமும் காணப்பட்டன.

இன்றைய சமாதான சூழ்நிலையில் சுதந்திரத்தை பூரணமாக அனுபவிக்க ஒரு புதிய யுகத்தை உருவாக்கவேண்டும் அவ்வாறனதோர் யுகத்தை உருவாக்கி நாட்டில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தி அதன் மூலம் சமூக, பொருளாதார மற்றும் கலாசார விருத்தியை ஏற் படுத்தும் தூய நோக்குடன் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சி பூரணமாக வெற்றியளிப்பதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற இந்நாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

நமக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு, ஒற்றுமை மற்றும் சகோதரத்துவம் என்பனவற்றை கட்டியெழுப்புவோம். (ம)

### தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவையில் கூட இதுபற்றித் தெரிவிக்கப்படவில்லை.

எனவே, வெகுசன தொடர்பு சாதன அமைச்சினால் புலிகளுக்கு வழங்கப்பட்ட வானொலி ஒலிபரப்பு அனுமதிப பத்திரத்தை திருப்பிப்பெறவேண்டும்.

இருபது கிலோமீற்றர் சுற்று வட்டாரத்தில் மட்டுமே கேட்கக்கூடியதாக அதன் ஒலிபரப்பு சாதனங்கள் அமைந்துள்ளதாகப் பிரதமர் தெரிவித்தபோதிலும் மன்னார், வவுனியா போன்ற தூர இடங்களில் அந்த வானொலியைக் கேட்கக்கூடியதாக உள்ளது.

இன்னும் சில நாள்களில் கொழும்பு போன்ற தூர இடங்களுக்கும் அதன் ஒலிபரப்புக்களை கேட்கக்கூடியதாக இருக்கும் என தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புலிகளின் ஒலிபரப்பு தொடர்பான வ்வரங்கள் வாரம் ஒருமுறை எனக்கு தெரிவிக்கப்படவேண்டும் - இப்படி ஜனாதிபதி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.


புலிகளுக்கு வானொலிக் கருவிகள் வழங்கியது தொடர்பான நிலையை விளக்கும் கடிதமொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் கடிதமொன்றையே தற்போது ஜனாதிபதி பிரதமருக்கு அனுப்பிவைத்திருக்கிறார். (ம)

### ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இவ்வாறு கூறிய அவர், "இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக எமக்கும் ஜே.வி.பிக்கும் இடையே ஒரு சிறுபிரச்சினை இருக்கிறது. அப்பிரச்சினையை விரைவில் தீர்த்து ஐ.தே. முன்னணி அரசை அதிகாரத்திலிருந்து வெளியேற்றும் போராட்டத்தை ஆரம்பிப்போம்" எனவும் சொன்னார். ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தால் பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைத் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும் பொ.ஐ.முன்னணி கூடுதலான ஆசனங்களைப் பெறமுடியும் எனவும் அனுரா பண்டாரநாயக்கா கூறினார். (ம)

A/L 2004 தமிழ்
நாக.தமிழிந்திரன்
பிரிவு I சனி, ஞாயிறு 7-8
பிரிவு II புதன், வியா 4-5
Note:- தொடக்கத்திலிருந்து கற்பிக்கப்படும்.
BEACON
யாழ். (14017)




## கண்ணீர் அஞ்சலி

02.02.2003 ஆம் திகதி விண்ணகம் எய்திய
எமது சங்கப் பணியாளர் (கிளை முகாமையாளர்)

**கணபதிப்பிள்ளை சுந்தரவடிவேல்**

அவர்களின் அகால மரணத்தையிட்டு, சக பணியாளர்களாகிய நாம் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்,
உடுப்பிட்டி பல நோக்கு
கூட்டுறவுச் சங்கம்.

(c/26356)

## மரண அறிவித்தல்

**திருமதி அன்னபூரணிதேவி விபுதராசா (தேவி)**

'தேவஸ்தான்' கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணிதேவி விபுதராசா நேற்று (3.02.2003) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்தம்பி - ஞானம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், விபுதராசாவின் அன்பு மனைவியும், விஜிதா (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சுரேஸ் (ஆசிரியர், பிறேஸ் றேறியன் பாலிகா வித்தியாலயம், கொழும்பு), சுதாகர் (தேசிய சேமிப்பு வங்கி - பருத்தித்துறை), அனுஷிகா (ஆசிரியை, பளை வேம்பொடுகேணி வித்தியாலயம்), தேவிகா (மாணவி - நுண்கலைப்பீடம் முதலாம் வருடம் மருதனார்மடம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபாங்கி (ஆசிரியை, பிஷப் கல்லூரி, கொழும்பு), சுந்தரச்செல்வன் (ஆசிரியர், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், மருணின் அன்புப் பேர்த்தியும் திருமதி இராஜகோபால் தங்கரத்தினம், ரவீந்திரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (4.2.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவஸ்தான்,*
*கண்டுவில் ஒழுங்கை,*
*சாகவச்சேரி.*

(C/26357)

தகவல்:
விபுதராசா (கணவர்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.